REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 330 ஐப்பசி 10 ஆம் நாள் திங்கட்கிழமை 26 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

*முச்சந்தி முரளி*



"கொரோனா தடுக்க முடக்கத்தைப் பற்றி பேசாமல் 'அடக்கத்தை' பேசுறாங்களே"

# தொற்றாளர்கள் அதிகரித்தால் உயிரிழப்பை தடுக்கமுடியாது!

## இராணுவத் தளபதி சிவப்பு எச்சரிக்கை



கொழும்பு, ஒக்ரோபர் 26

"கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் என்ற சுகாதாரத் துறையினரின் அறிவிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றோம். கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு 23 மருத்துவமனைகள்தான் கைவசம் உள்ளன. நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் சிகிச்சையளிப்பதில் பிரச்சினை – பின்னடைவு ஏற்படும். அப்போது உயிரிழப்புக்களைத் தடுக்க முடியாமல் போய் விடும். அதனைத் தடுப்பதற்கான முன்னாய்த்த பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம்." 18

## கொரோனாவால் சாவு 16

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மற்றொருவரும் உயிரிழந்துள்ளார். கடந்த ஒரு வாரத்தினுள் மூன்றாவது உயிரிழப்பு பதிவாகியுள்ளது. கொழும்பு 2 ஐச் சேர்ந்த 70 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய மருத்துவமனையின் அதி 18

## நெடுங்கேணியில் மேலும் ஒரு தொற்றாளர்

யாழ்ப்பாணம், ஒக். 26

வவுனியா நெடுங்கேணியில் இது வரை 12 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் நேற்று மேலும் 18



## கைக்குண்டு வெடித்து 2 சிறுவர்கள் காயம்!

மன்னார், ஒக். 26

மன்னார் மடு பிரதேச செயலகத்துக்குட்பட்ட இரணை இலுப்பைக்குளம் பகுதியில் கைக்குண்டு வெடித்து இரு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலை 18

## முடக்கப்பட்ட இடங்களில் இருந்து வருவோர் தனிமைப்படுத்தப்படுவர்

*வடக்கு மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 26

கொரோனாத் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டு முடக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து வடக்கு மாகாணத்திற்கு வருபவர்கள் 14 நாள்கள் சுயதனி 18

## கொள்ளளவை நெருங்கும் மருதங்கேணி மருத்துவமனை

யாழ்ப்பாணம், ஒக். 26

கொரோனா நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் மருதங்கேணி மருத்துவமனை அதன் கொள்ளளவை 18



திடீரென தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்:

## உடல் கருகி இளைஞன் உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஒக். 26

கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளியவளை பிரதான வீதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் எரிந்து உயிரிழந்துள்ளார். 18

## பேச்சு தாமதமாகலாம்

*சம்பந்தன் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக். 26

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் எமது கட்சியுடன் பேசுவதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆர்வம் காட்டியிருந்தார். எனினும், தற்போதைய சூழ்நிலையில் இந்தப் 18



## நேற்று தொற்று 351

கொழும்பு, ஒக். 26

இலங்கையில் நேற்று 351 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலை 18

## தப்பிவந்த தொற்றாளர் மன்னாரில் மடக்கிப்பிடிப்பு

மன்னார், ஒக். 26

கொழும்பு பேலியகொட பகுதியில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட மன்னாரைச் சேர்ந்த ஒருவர் தனிமைப்படுத்தலிலிருந்துதப்பி 18

## பொதுப்போக்குவரத்து சேவைகள் நிறுத்தம்

கொழும்பு, ஒக். 26

ரயில் மற்றும் பஸ் போக்குவரத்து சேவைகள் இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. க.பொ.த. உயர்தரப் பரீட்சை மாணவர்களுக்கான சிறப்பு ரயில் சேவையைத் தவிர, பிரதான ரயில் பாதை, புத்தளம் பாதை 17

## பரீட்சை ஆணையாளரின் விசேட அறிவிப்பு

கொழும்பு, ஒக். 26

இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் அதிகாரிகள் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு சமுகமளிக்குமாறு பரீட்சைகள் ஆணையாளர் கோரிக்கை 18

## விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களிடையே கடந்த 18

# யாழ். பல்கலை வியாபாரபீட ஆய்வு மாநாடு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக் 26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக, வியாபாரக் கற்கைகள் பீடத்தின் வருடாந்த ஆய்வு மாநாடு இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.




வவுனியா- மன்னார் வீதி, பம்பைமடுவில் அமைந்துள்ள வியாபாரக் கற்கைகள் பீடத்தில், பீடாதிபதி கலாநிதி வை.நந்தகோபன் தலைமையில் இந்த ஆய்வு மாநாடு இடம்பெறவுள்ளதுடன், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சம நேரத்தில் சூம் செயலி மூலம் ஒன்லைனிலும் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ் வருடத்துக்கான ஆய்வு மாநாட்டில் வியாபார நிலைமாற்றத்தில் கீழைத்தேய மேலைத்தேய இணைவு என்ற கருதுகோளின் கீழ் 19 உப பிரிவுகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அதிதிப் பேச்சாளர்களாக மொரட்டுவ பல்கலைக்கழக வியாபாரகற்கைகள் பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.டபிள்யூ.எஸ்.பி. திசநாயக்க, ஆஸ்திரேலியாவின் மர்டொக் பல்கலைக்கழக தகவல் தொழில் நுட்ப, கணிதப் புள்ளிவிபரவியல் பேராசிரியர் தனியா மக் கில் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இரண்டாவது தமிழ்த் துணைவேந்தரும், இலங்கையிலுள்ள துணைவேந்தர்கள் மற்றும் பணிப்பாளர்கள் அமையத்தின் தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் எஸ். ஏ. அரியதுரை பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளதுடன், வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வுகளின் இணைப்பாளராக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. ருக்ஷன் செயற்படவுள்ளார். (ப)

# யாழில் எவருக்கும் நேற்று தொற்றில்லை

யாழ்ப்பாணம், ஒக்.26

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில நேற்று முன்னெடுக்கப்பட்ட 262 பி.சி.ஆர். பரிசோதனைகளில் ஒருவருக்கும் கொவிட் 19 தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், வடமாகாணத்தின் பல இடங்களிலிருந்தும் 262 பேருக்கான கொவிட் -19 பரிசோதனைகள் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையிலேயே அவர்களில் ஒருவருக்கும் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# அரவிந்தகுமார் எம்.பிக்கு காலக்கெடு விதிப்பு

நுவரெலியா, ஒக்.26

20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது தொடர்பில் விளக்கமளிப்பதற்காக அவருக்கு 14 நாள்கள் அவகாசம் வழங்கப்படும் என்றும், அவர் வழங்கும் பதிலின் அடிப்படையில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதென மலையக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியன தீர்மானித்திருந்தன. இந்த நிலையில் இம்முடிவை மீறி திருத்தத்துக்கு ஆதரவாக அரவிந்தகுமார் எம்.பி., வாக்களித்தது தொடர்பில் மத்தியகுழுக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இது விடயம்.தொடர்பில் அரவிந்தகுமார் எம்.பியிடம் விளக்கம் கோருவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. 14 நாள்களுக்குள் அவர் உரிய விளக்கத்தை முன்வைக்கவேண்டும். மத்திய செயற்குழுவின் இந்த முடிவு செயலாளர் ஊடாக அரவிந்தகுமார் எம்.பிக்கு அனுப்பி வைக்கப்படும்.14 நாள்களுக்குப் பின்னர் மத்திய குழுவும், கவுன்ஸிலும் மீண்டும் கூடும். அவர் விளக்கமளித்திருக்கும் பட்சத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதுவரையில் மலையக மக்கள் முன்னணி, மலையகத் தொழிலாளர் முன்னணி ஆகியவற்றின் செயற்பாடுகளில் அவர் ஈடுபடக்கூடாது என முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றார். (ப)

# உ\த மாணவர்களுக்கு ஊரடங்கு தடையல்ல

## பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.26

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஊரடங்கு உத்தரவு தடையாக இருக்காது என்றும், சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப எந்த வகையிலும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் என்றும் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. "கொழும்பு கோட்டை மற்றும் புறக்கோட்டை ஆகிய பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டி ருந்தாலும், ஏற்கனவே கொழும்புக்கு வந்து, கொழும்பிலிருந்து வெளியேறத் தயாராகும் வாகனங்களுக்கு ஊரடங்கு உத்தரவு தடையாக இருக்காது. ஊரடங்கு உத்தரவு உள்ள பகுதிகளில் அத்தியாவசியப் பொருள்களை அதிக விலைக்கு விற்கும் சம்பவங்கள் குறித்து தகவல்கள் கிடைத்துள்ளன. சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார். (ப)

# புதுக்குடியிருப்பில் 13 பேருக்கு கொரோனா

## இராணுவப் பயிற்சி முகாமில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள்

முல்லைத்தீவு, ஒக்.26

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு 68ஆவது படைப்பிரிவின் திம்பிலி பகுதியில் உள்ள இராணுவப் பயிற்சி முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் 13 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளது என்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தைக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் 146 பேர் திம்பிலி பகுதியில் உள்ள இராணுவப் பயிற்சி முகாமில் தனிமைப் படுத்தப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் அடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை இவர்களில் 20 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. நேற்றுமுன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மேலும் 39 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருந்தது. நேற்றைய பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மேலும் 13 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே தொற்றுக்கு உள்ளானவர்கள் கொரோனா சிகிச்சை வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றையதினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள 13 பேரையும் கொரோனா சிகிச்சை வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ப)

# சாவ. பொறியியலாளரின் மனைவிக்கு தொற்றில்லை

## முதலாவது பரிசோதனையில் உறுதி

வவுனியா, ஒக்.26

நெடுங்கேணி தனிமைப்படுத்தல் நிலையத்தில் கடந்த 21ஆம் திகதி முதல் தனிமைப்படுத்தப்பட்ட சாவகச்சேரியைச் சேர்ந்த பொறியியலாளருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் சட்டத்தரணியான அவரது மனைவிக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்குத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை எனக் கிடைத்தபோதும் சட்டத்தரணி தொடர்ந்து சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு 14 நாள்களில் பின் இரண்டாவது பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படும் என்று மாகாண சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியா - நெடுங்கேணி வீதி சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் நிறுவனத்தில் பணியாற்றும் சாவகச்சேரி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொறியியலாளர்கள் இருவர் கொரோனாத் தொற்றாளர்கள் என்று அடையாளம் காணப்பட்டனர். அவர்களில் சாவகச்சேரியைச் சேர்ந்த பொறியியலாளரின் மனைவிக்கே இவ்வாறு தொற்றில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# கொழும்பிலிருந்து வந்த பெண் உள்ளிட்ட நால்வருக்கு தனிமை

## இளவாலையில் சம்பவம்

இளவாலை, ஒக்.26

கொழும்பிலிருந்து வந்த இளம் பெண் ஒருவர் இளவாலைப் பகுதியில் தங்கியுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரில், அந்தப் பெண் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருடன் நெருங்கிய தொடர்புபட்டவர்கள் என்று தெரிவிக்கப்பட்ட மூன்று ஆண்களும், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.இந்தச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம், இளவாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்துள்ள நிலையில், சந்தேகநபரான குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவர் அண்மையில் கொழும்பிலிருந்து வந்தவர் என்று தெரியவந்தது. இதனை அடுத்து அவருடன் நெருங்கிய தொடர்புபட்ட 3 பேர் அடையாளம் காணப்பட்டு அவர்கள் அவர்களுடைய வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அந்தப் பெண்ணும், தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். கடந்த சில நாளாக அவர் தங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்படும் யாழ் நகரப் பகுதியில் உள்ள ஹொட்டல் தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-26)

# பொதுமக்கள் நடமாட்டம் கட்டுப்படாவிடில் ஆபத்து!

கொழும்பு,ஒக்.26

பொதுமக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால், அடுத்த சில நாள்களில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்த முடியாததொன்றாக மாறலாம் என்று தொற்றுநோயியல் பிரிவின் தலைமை அதிகாரி சுசத் சமர வீர எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
நாட்டில் கொரோனா வைரஸ் பரவும் வேகம் அதிகரித்துள்ளது. வைரஸ் இதே வேகத்தில் பரவினால் நாட்டின் மேலும் பல உயிரிழப்புகள் ஏற்படலாம்.
பொதுமக்கள் நடமாட்டத்துக்கு கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளிலேயே ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொடர்ந்தும் ஏனையவர்களுடன் அதிகளவில் தொடர்பு கொள்கின்றனர்.
மரணச்சடங்குகள், திருமணங்கள், மத நிகழ்வுகள் மூலம் கொரோனா வைரஸ் பரவியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.- என்றார். (க-இ)



## புறக்கோட்டையில் 77 தொற்றாளர்கள்

கொழும்பு, ஒக். 26
கொழும்பு புறக்கோட்டை, குணசிங்க புரத்தில் 77 பேருக்கு கொரோனா பெருந்தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
நேற்றுக் காலை இந்தத் தகவல் வெளிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அந்த 77 பேருடன் தொடர்புகளைப் பேணியவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.
அத்துடன் குறித்த பகுதியில் சமூகத் தொற்று ஏற்பட்டுள்ளதா என்று ஆராயப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-இ)

## தனிமைப்படுத்தப்பட்டவரால் மது நிலையத்துக்கு பூட்டு!

### கோப்பாயில் சம்பவம்

கொடிகாமம், ஒக். 26
கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்ட நபர் ஒருவர் உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள மதுவிற்பனை நிலையத்தில் இருந்து கள் கொள்வனவு செய்ததை அடுத்து அந்த மது விற்பனை நிலையம் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மூடப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி செயற்பட்டு வருகின்றது. அங்கு தனிமைப்படுத்தப்பட்ட நபரொருவர் பிறிதொருவரின் உதவியுடன் பனம்கள் வாங்கிப் பருகியுள்ளார்.
இந்தத் தகவல் பொது சுகாதாரப் பரிசோதகர்களுக்கு தெரியவந்ததை அடுத்து கள் வாங்கச் சென்றவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.
அவரது குடும்பமும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக கள் விற்பனை நிலையமும் பூட்டப்பட்டுள்ளது. (ம-159)

## சபாநாயகரின் பணியாள் தொகுதிக்கு அவருடைய உறவினர்களே நியமனம்!

### கொழும்பு ஊடகம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 26
சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது பணியாள் தொகுதியின் அனைத்துப் பதவிகளுக்கும் குடும்ப உறுப்பினர்களை நியமித்துள்ளார் என சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இதன்படி தனது சகோதரரான வசந்த யாப்பா அபேவர்தனவை பிரத்தியேக செயலாளராகவும், மற்றுமொரு சகோதரரான சரத் யாப்பா அபேவர்தனவை ஊடக செயலாளராகவும் சபாநாயகர் நியமித்துள்ளார்.
அத்துடன், சபாநாயகரின் மகனான சமீர யாப்பா அபேவர்தனவுக்கு இணைப்புச்செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. மற்றுமொரு சகோதரரும் இணைப்புச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
மக்கள் தொடர்பாடல் அதிகாரி பதவிக்கு தனது மைத்துனரான பிரேமானந்த என்பவரை நியமித்துள்ள சபாநாயகர், மேலும் சில செயலாளர்களை நியமிப்பதற்கு அமைச்சரவையின் அனுமதியைக் கோரியுள்ளார் எனவும், அப் பதவிகளும் குடும்ப உறுப்பினர்களுக்கே வழங்கப்படவுள்ளது எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-44)



## இலவச யோக பயிற்சி

வவுனியா, ஒக். 26
வவுனியா மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்தின் அனுசரணையுடன் கிரியா பாபாஜி நிறுவனத்தினர் இலவச யோக வாழ்வு பயிற்சியை முன்னெடுத்துள்ளனர்.
பழங்காலத்திலிருந்தே குருகுலக் கல்வி முறையில் கற்பிக்கப்பட்டு வருகின்ற யோகா மனதைக் கட்டுப்படுத்தும் ஒரு முறையாகவும் பேணப்பட்டு வந்திருக்கின்றது. மனதைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியும் மன ஆற்றலால் உண்டாகின்ற பல்வேறுபட்ட சாதனைகளும் மனம், உடல், செயலுணர்வுகளின் கட்டுப்பாடு மற்றும் இயற்கைக்கும் மனிதனுக்குமான ஒத்திசைவு முதலியனவும் இணைந்தவொரு உருவாக்கமாக யோகதத்துவம் உள்ளது. இதன் விளைவாக யோகதத்துவத்தை 'மன விஞ்ஞானம்' எனச் சுட்டிக் கூறுவர். அந்த வகையில் வவுனியாவில் இது ஆரம்பிக்கப்படுகின்றது என்று ஒன்றியம் தெரிவித்தது.
முதற்கட்டமாக வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்தில் நேற்றுக் காலை யோக வாழ்வு பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யோக வாழ்வு பயிற்சியில் சமய ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-18)

## மக்கள் நடமாட்டம் பதுளையில் குறைவு

பதுளை, ஒக்.26
பதுளை மற்றும் தியத்தலாவ பகுதிகளில் 4 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானதால், நகரப்பகுதிகளுக்கு வரும் மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளது.
பதுளை, பண்டாரவளை, தியத்தலாவை மற்றும் ஹப்புத்தளை ஆகிய நகரங்கள் நேற்று வெறிச்சோடிய நிலையில் காணப்பட்டன. வாராந்த சந்தைகளும் மூடப்பட்டிருந்தன.
பதுளை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள வாராந்த சந்தை நடவடிக்கை இடம்பெற்றாலும் மக்கள் நடமாட்டம் இருக்கவில்லை. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெற்றன. (வ-இ)

## பளையில் வாள்கள் மீட்பு

கிளிநொச்சி, ஒக். 26
பளை முல்லையடி பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று வாள்கள் நேற்று மீட்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முல்லையடி பகுதியில் இருந்து மேற்படி வாள்கள் மீட்கப்பட்டன.
ஏ9 வீதிக்கு அருகாமையில் மின் இணைப்புப் பணிகளுக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கம்பங்களுக்கு இடையில் இருந்தே மேற்படி வாள்கள் மீட்கப்பட்டன. வாள்களை யார் அங்கு வைத்தது என்பது தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-6)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது


யாழ்ப்பாணம், ஒக். 26
கோப்பாய் தேசிய பயிற்சிக் கலாசாலை தனிமைப்படுத்தல் மையமாக இராணுவத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ள நிலையில் அதன் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் கட்டாய தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்றுமுன்தினம் தனிமைப்படுத்தல்மையத்திலிருந்து ஒருவர் தப்பிக்க முயற்சித்து அவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.
இந் நிலையில் இன்று காலையிலிருந்து கோப்பாய் தேசிய பயிற்சிக் கலாசாலையில் இராணுவத்தினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என பலாலி இராணுவ கட்டளைத் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-இ)

# சமைத்த மீன்களால் கொரோனா பரவாது

## அழுத்திக் கூறுகிறது சுகாதார அமைச்சு

**கொழும்பு, ஒக்.26**

**நன்கு சமைத்த மீன் ஊடாக கொரோனா பரவாது என்ற விஞ்ஞானபூர்வமான ஆதாரத்தினை சுகாதார அமைச்சு மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது என பதில் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் சதாசிவம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.**




இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சமைத்த மீனை உண்பதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றுகிறது என சமூகத்தில் பரவியுள்ள வதந்திகளை நம்ப வேண்டாம்.

கோட்பாட்டு அடிப்படையில் எந்த ஒரு மேற்பரப்பிலும் கொரோனா வைரஸ் காணப்படும் என்பதால் சமைப்பதற்கு மீனைத் தயாரிக்கும் போது அல்லது சேமித்து வைக்கும் போது முகத்தை கைகளால் தொடுவதை தவிர்ப்பதுடன் சமையல் பாத்திரங்கள் மற்றும் கரங்களை நன்கு கழுவி கொள்ளுதல் வேண்டும்.மேலும் அடிப்படையற்ற விதத்தில் மீன் சந்தைகளை மூடுவது அநாவசியமாகும். பரிந்துரைக்கப்பட்ட சுகாதார நெறிமுறைகளான முகக்கவசம் அணிதல் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் மற்றும் கைகளை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல் ஆகியவற்றை இறுக்கமாக பின்பற்றி மீன் சந்தைகளை தொடர்ந்து நடத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# தலைமன்னார் – கொழும்பு ரயில் சேவையும் நிறுத்தம்




மன்னார், ஒக்.26

கொவிட்-19 காரணமாக தலைமன்னார் - கொழும்பு ரயில் சேவையும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக சில பகுதிகள் முடக்கப்பட்ட நிலையில் தலைமன்னார் - கொழும்பு ரயில் போக்குவரத்துச் சேவையின்போது. இவ்விடங்களில் ரயில் தரிக்கப்படாதே சேவைகள் இடம்பெற்றன. ஆனால் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் தலைமன்னார்- கொழும்பு ரயில் சேவைகள் காலவரையின்றி நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப60)

# அதிகரிக்கும் கொரோனாப் பரவல்; தலதாவில் கட்டுப்பாடுகள் இறுக்கம்

கண்டி, ஒக்.26

கொரோனாப் பரவலைத் தடுக்கும் முகமாக கண்டி தலதாமாளிகையில் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தலதாமாளிகைக்கு வருகைதரும் சகலரும் தங்களுடைய ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களான தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை எடுத்துவரவேண்டுமென ஸ்ரீ தலதா மாளிகையின் தியவடன நிலமே பிரதீப் திலங்க தெலே அறிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்தும் அதனை அண்மித்த பகுதியிலிருந்தும் ஸ்ரீ தலதா மாளிகைக்கு சமூகமளிக்க முடியாது. அவர்கள் வளாகத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். தலதா மாளிகைக்குள் நுழையும் சகலரும் முகக்கவசங்களை கட்டாயமாக அணிந்திருக்கவேண்டும். உடல் வெப்பநிலை அளவிடப்படும். சுகாதார வழிகாட்டல்களை சகலரும் அவ்வாறே கடைப்பிடிக்கவேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே, தலதா மாளிகையின் வளாகத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# மீன்பிடித் துறைமுகங்களுக்கு விசேட சுகாதார வழிகாட்டல்

## விரைவில் தயாரிக்க ஆலோசனை

கொழும்பு, ஒக்.26

மீன்பிடித் துறைமுகங்களுக்கான விசேட சுகாதார வழிகாட்டல்களை விரைவில் தயாரிப்பதற்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சுகாதார அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தற்போது மூடப்பட்டுள்ள பேருவளை துறைமுகத்திலுள்ள 32 நீண்டநாள் படகுகளிலும் காலி துறைமுகத்திலுள்ள 21 நீண்ட நாள் படகுகளிலும் 3 இலட்சத்து 50ஆயிரம் கிலோகிராம் மீன்கள் காணப்படுகின்றன என கடற்றொழில் அமைச்சு சுட்டிக்காட்டி யுள்ளது. இதற்கமைய, நீண்டநாள் படகுகளிலுள்ள மீன்களை நுகர்வோருக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கான திட்டத்தை விரைவில் தயாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-இ)

# '20'க்கு ஆதரவளித்த எம்.பிக்களிடம் விளக்கம் கோரும் முஸ்லிம் காங்கிரஸ்

கொழும்பு, ஒக்.26

20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது என அக்கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது,

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தன்னுடைய இல்லத்துக்கு நேற்று முன்தினம் அழைத்து இது தொடர்பில் கலந்தாலோசித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம் ஹரீஸ், பைசல் காசிம், எம்.எஸ் தௌபீக், நசீர் அஹமட் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது, 20 ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்களின் நிலைப்பாட்டை கட்சியின் உயர்பீடத்திற்கு விளக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் கட்சியின் உயர்பீடம் இது தொடர்பில் கூடி ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானங்களை எடுக்கும் எனத் தெரிவித்தார். (வ-இ)

# கொரோனாப் பரவல்; 16 ரயில் சேவைகள் ரத்து

கொரோனாப் பரவல் அதிகரிப்புக் காரணமாக 16 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, புத்தளம் ரயில் மார்க்கத்தினூடான நாளாந்த 8 ரயில் சேவைகள் இரத்துசெய்யப்பட்டுள்ளன. களனி ரயில் மார்க்கத்தில் இரண்டு நாளாந்த ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கொழும்பு கோட்டையில் இருந்து பயணிக்கும் காலி இரவு நேர தபால் ரயில்களைத் தவிர்ந்த, ஏனைய அனைத்துதபால்ரயில் சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. கோட்டைப் பகுதிக்கு தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# புதிய அரசமைப்புக்கு மக்களின் கருத்தறிவு

கொழும்பு, ஒக்.26

புதிய அரசமைப்பை தயாரிப்பது தொடர்பில் பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேட குழுவுக்கு மக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும் என நீதி அமைச்சின் செயலாளர் எம்.பி.கே. மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தமது கருத்துக்களை அறை இலக்கம் 32, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கோ அல்லது expertscommpublic@yahoo.com எனும் மின்னஞ்சலுக்கோ அனுப்ப முடியும். எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை பொதுமக்களின் கருத்துக்கள் கேட்டறியப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# பிரதமர் அலுவலகத்தில் எவருக்கும் தொற்றில்லை

## பிரதமர் ஊடகப் பிரிவு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.26

பிரதமர் அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள எந்தவொரு பொலிஸ் அதிகாரியும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகவில்லை என பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இது தொடர்பில் அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிரதமர் அலுவலகம், அலரி மாளிகை மற்றும் விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லத்தில் சேவையாற்றும் பிரதமர் பாதுகாப்பு பிரிவின் எந்தவொரு அதிகாரியும் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகவில்லை. பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரியொருவருக்கு கொவிட்-19 தொற்று ஏற்பட்டுள்ளது என பரவிவரும் செய்தியில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை. பிரதமர் பாதுகாப்புப் பிரிவுடன் இணைந்த வெளிப்புற பிரிவொன்றின் அதிகாரியொருவரே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார். பிரதமர் பங்கேற்கும், வெளி நிகழ்வுகளின் பூரண பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான தயார்படுத்தல்களின்போது மாத்திரம் பங்கேற்கும் அந்த அதிகாரி கடந்த ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி முதல் சேவைக்குச் சமூகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தனிமைப்படுத்தல் என்பது தன்மானப் பிரச்சினையல்ல

கொரோனாப் பெருந்தொற்றின் மூன்றாவது அலை இலங்கையை தீவிரமாகத் தாக்கத் தொடங்கியுள்ளது. இந்தத் தொற்று சமூகத் தொற்றாக உருவாகவில்லை என்று அரசு சப்பைக்கட்டு கட்டினாலும், உள்ளங்கையில் நெல்லிக்கனி போன்று நிலைமையின் தீவிரம் தெட்டத்தெளிவாகவே புலப்படுகின்றது. மேலதிகத் தொற்று மையங்களும், கொத்தணிகளும் உருவாகக்கூடாது என்பதுதான் அனைவரதும் பிரார்த்தனை. ஆனால் சில விஷமிகளின் தூரநோக்கற்ற செயற்பாடுகளால் கொரோனா மேலும் ருத்ர தாண்டவமாடிவிடுமோ, கொத்தணிகளும் தொற்று மையங்களும் வலிந்து ஏற்பட்டுவிடுமோ என்ற ஐயம் மனதில் வெகுவாகவே எழுகின்றது.

இலங்கையில் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றவர்கள் தப்பித்து ஓடுகின்ற செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்றவண்ணம் உள்ளன. ஆகப்பிந்தியதாக கோப்பாய் தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்த ஒருவர் நேற்றுமுன்தினம் தப்பித்து ஓடியுள்ளார். பின்னர் அவரை அங்கிருந்த தன்னார்வலர்கள் விரட்டிப்பிடித்து உரிய அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். அதன் பின்னர் பிடிக்கப்பட்டவரும், பிடித்துக் கொடுத்த தன்னார்வலர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் என்றால் என்ன? என்பது தொடர்பில் மக்களிடம் போதிய மனப்பக்குவம் அற்ற நிலையைத்தான் இத்தகைய செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன.

தனிமைப்படுத்தல் என்பது தன்மானப் பிரச்சினை அல்ல. சமூகத்தின் ஆரோக்கியத்துக்காகச் செய்யப்படும் ஆகச்சிறந்த தியாகம் என்றும்கூட அதைச் சொல்லலாம். அத்துடன் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அனைவரும் கொரோனாத் தொற்றாளர்கள் என்றும் இல்லை. இதுகாலுமான புள்ளிவிவரப்படி தனிமைப்படுத்தப்பட்டவர்களின் சிறு சதவீதத்தினரே தொற்றாளர்களாக உள்ளனர். இவ்வாறிருக்கையில் தடைகளைத் தாண்டித் தப்பித்தல் என்பது தேவையற்ற, முட்டாள்த்தனமான செயற்பாடு என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அரசு அதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்ட நபரொருவர் தப்பித்துச் செல்வதால் எந்தப் பயனும் அவருக்குக் கிட்டப்போவதில்லை. அவரை போனால் போகட்டும் என்ற தோரணையில் துறைசார் அதிகாரிகள் விட்டுவிடப்போவதில்லை. உச்சக்கட்டத் தேடுதலின் பின்னராவது அவர் எப்படியும் கண்டுபிடிக்கப்படத்தான் போகின்றார். அதன் பின்னர் மீண்டும் அவரின் தனிமைப்படுத்தல் காலம் ஆரம்பிக்கும். அவர் தப்பித்துச் செல்லும்போது சென்ற இடங்கள், சந்தித்த நபர்கள் என்ற அனைத்து விடயங்களும் பின்னர் ஆராயப்பட்டு சுகாதார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இதில் சம்பந்தமே இல்லாத வேறுசிலரும் தனிமைப்படுத்தப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும். எனவே தனிமைப்படுத்தலுக்கு உட்பட்டிருப்பவர்கள் தம்மீதான நடவடிக்கையை சமூக விரோதச் செயற்பாடாகவோ, தன்மானப் பிரச்சினையாகவோ கொள்ளக்கூடாது. இந்த நாட்டுக்கு நீங்கள் செய்யும் தலையாய கடமை என்றும்கூட இந்தத் தனிமைப்படுத்தல் காலங்களைக் கொள்ளமுடியும்.

அரசும் இவர்கள் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தனிமைப்படுத்தலில் இருந்து தப்பிப்போரை பெரும் சிரமத்துக்கு மத்தியில் தேடிக் கண்டுபிடித்து மீண்டும் தனிமைப்படுத்துவதுடன் நின்றுவிடக்கூடாது. மாறாக தனிமைப்படுத்தல் பொறிமுறைகளை மீறுவோருக்கு சிறைத்தண்டனைகள் விதிக்கப்படும் அளவுக்கு சட்ட இறுக்கங்களை மேற்கொள்ள வேண்டும். அதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

# தனிமைப்படுத்தல் முகாமால் ஆபத்து

### பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரும் மக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 26

**கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனாத் தனிமைப்படுத்தல் முகாமால் தமக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று கோப்பாய் மத்தி மக்கள், சுகாதார அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.**

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 20 ஆம் திகதியில் இருந்து பலர் இங்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 3 பேர்வரைவைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த முறை இதே போன்று தனிமைப்படுத்தல் முகாமை அமைப்பதற்கு கிராம மக்களாகிய நாம் எமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தோம். ஆனால் இம்முறை நாடு முழுவதும் வைரஸ் தொற்று இனங்காணப்பட்டு வரும் காரணத்தால், மனிதாபிமான அடிப்படையில் எமது எதிர்ப்பைக் காட்டாமல் அமைதியாக இருந்தோம்.

இந்தப் பகுதியைச் சுற்றியுள்ள அயல் கிராமங்களுக்கு இதனால் எந்தப் பாதிப்பும் வராது என நாம் நம்பியிருந்தோம்.

ஆனால் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களால் நம்பிக்கை இழந்துள்ளோம். தனிமைப்படுத்தப்பட்டவர் தப்பிச்செல்ல முயன்றார். அயலில் உள்ளவர்களுடன் சட்டவிரோத மதுபான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றனர் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்துள்ளோம்.

இது எமக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. தற்போது எமது பிரதேசத்துக்கு வருவதற்கு, ஏனையவர்கள் அச்சப்படுகிறார்கள். நாளடைவில் ஒதுக்கப்பட்டவர்களாக ஆக்கப்படுவோமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. நிம்மதியாக வீதிகளில் நடமாட முடியவில்லை. பெரும் மன உளைச்சலுக்குள்ளாகியுள்ளோம்.

மனிதாபிமான ரீதியில் நாம் ஒத்துழைப்பு வழங்கியதற்கு எமக்கு தொற்று நோயையா பரிசாக வழங்கப்போகிறீர்கள். அமைதியாக வாழ்ந்த வாழ்வைச் சீரழித்து விட்டதாகவே எண்ணுகிறோம்.

எனவே உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அந்தவகையில்

1. தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வெளியில் உள்ளவர்களுடன் தொடர்பைப் பேணாதவாறு சுற்றுவட்டாரத்தில் பாதுகாப்பைப் பலப்படுத்தல் மற்றும் தொடர்பைப் பேணுபவர்களுக்கு கடுமையான நடவடிக்கைகளை எடுத்தல்.
2. தனிமைப்படுத்தப்பட்டவர்களுடன் தொடர்பைப் பேணுபவர்கள், உரிய பாதுகாப்புகள் மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் வெளியில் நடமாடுவதைத் தடுத்தல்.
3. சுகாதாரத்துறையினர் தொற்று நீக்கல் செயற்பாடுகள், விழிப்புணர்வு நடவடிக்கைகளை சுற்றுவட்டாரத்தில் முன்னெடுக்க வேண்டும்.
4. மேற்குறித்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் இருப்பின், இப்பகுதியில் இருந்து உடனடியாக தனிமைப்படுத்தல் நிலையத்தை அகற்ற வேண்டும் - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். மாவட்டச் செயலர், பாதுகாப்புப் படைகளின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (க-இ)

## தீவிரவாத கொள்கையுடன் நடமாடினார் சஹ்ரான்

### ஆணைக்குழுவில் மற்றொரு சாட்சி

கொழும்பு, ஒக். 26

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை நடத்திய சஹ்ரான் ஹாஷீம் ஐ.எஸ். தீவிரவாதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தமையால், தேசிய தவ்ஹீத் ஜமாத்திலிருந்து நீக்கப்பட்டார் என்று முன்னாள் செயலாளர் மொஹமட் யூஸுப் தெரிவித்தார்.

தற்போது சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர், உயிர்த்த ஞாயிறு தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி கல்முனை அலியார் வீதியில் இடம்பெற்ற மோதலுக்குப் பின்னர் சஹ்ரான் தலைமறைவாகினார். அன்று முதல் சஹ்ரானை நான் காணவில்லை

அவரோடு எந்தவித தொடர்புகளையும் அதற்குப் பின்னர் பேணவில்லை என்று அவர் சாட்சியத்தில் தெரிவித்தார். (க-இ)

## உயர் தர மாணவன் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஒக். 26

கிளிநொச்சியில் உயர்தர வகுப்பு மாணவன் கிணற்றிலிருந்து சடலமாக நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தருமபுரம் மத்திய கல்லூரியில் கற்கும் மோகநாதன் தர்சன் (வயது18) என்ற மாணவனே சடலமாக மீட்கப்பட்டார். தருமபுரம் பகுதியில் நடைபெற்ற திருமண நிகழ்வுக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்ற மாணவன் அன்று இரவாகியும் வீடு திரும்பவில்லை. அவருடைய பெற்றோர் அவரைத் தேடியபோதே நேற்றுமுன்தினம் அவர் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளார். (த-113)

## கொழும்பின் மேலும் சில பகுதிகளுக்கு ஊரடங்கு!

கொழும்பு, ஒக். 26

மறு அறிவித்தல் வெளியாகும் வரை கொழும்பு கோட்டை, புறக்கோட்டை, பொறளை மற்றும் வெலிகட பொலிஸ் பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6 மணி முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# சுகாதார வழிகாட்டுதல்களை கட்டாயம் கடைப்பிடிக்கவும்

## மக்களுக்கு வலியுறுத்தல்



சுவாசப் பாதுகாப்பு

**கொழும்பு, ஒக்.26**

**செயற்பாடுகள் மற்றும் வாழ்க்கை முறைகள் பொது செயல்பாடுகள் மற்றும் கூட்டங்களை நடத்துதல் மற்றும் சிலரின் பொறுப்பற்ற நடத்தை வழிகள் ஆகியவற்றினால் வைரஸின் பரவல் காணப்படுவதனால் பாதுகாப்பு சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு பொது மக்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.**



கைகளைச் சுத்தம் செய்தல்

பாதுகாப்புத் தலைமை பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையில் இடம்பெற்ற பணிக்குழு கூட்டத்தில் மேற்படி விடயம் தொடர்பில் வலுயுறுத்தப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் கொவிட் - 19 கட்டுப்பாட்டு துறைசார்ந்த அனைத்து உறுப்பினர்களும், நிபுணர்களும் கலந்துகொண்டனர். இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, கொவிட்-19 பரவல் மற்றும் பேலியகொட மீன் சந்தைக் கொத்தணிகளின் தற்போதைய நிலையை விளக்கினார்.

மேலும், நாட்டில் முழு முடக்கத்துக்கான ஊரடங்கு உத்தரவை கொள்ளும் தேவை இல்லாததால் மதிப்பீட்டின்மூலம் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட வேண்டும் என்றும் கூட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. வைரஸின் பரவலினால் புதிய அச்சுறுத்தல்கள் காணப்படுவதால் குறித்த ஊரடங்கு உத்தரவு நடைமுறைகள் பரிசீலிக்கப்படும்.

பாதிக்கப்படக்கூடிய காலி, அலுத்கம, பேருவளை உள்ளிட்ட துறைமுகங்களிலிருந்து தொற்றுக்குள்ளானோர் பதிவாகியுள்ளனர். பேலியகொட கொத்தணியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட தொற்று நோயாளர்கள் நேரடியாகவோ அல்லது வேறுவிதமாகவோ குறித்த பகுதிகளில் தொடர்புகளைப் பேணியதால் அந்த பகுதிகளிலும் அதைச் சுற்றியும் பி.சி.ஆர். சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. -சமூகத்தில் தேவையற்ற பயணங்களை கட்டுப்படுத்தவும் சுகாதார வழிகாட்டி ஆலோசனைகளை கடைபிடித்து வீடுகளில் பாதுகாப்பாக இருக்கவும் பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 400 படுக்கைகள் கொண்ட கல்கந்த தனிமைப் படுத்தப்பட்ட மையம் கொவிட்-19 சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டு, இராணுவம் மற்றும் சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களுடன் தொடர்ச்சியான விழிப்புணர்வு திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் சுகாதார ஊழியர்களிடையே வைரஸ் தொற்று அபாயத்தை வெகுவாகக் குறைக்க முடியும் என்று இராணுவத் தளபதி கூட்டத்தில் தெரிவித்தார். (ந-இ)

# வவுனியாவில் மூடப்பட்ட 4ஆவது வர்த்தக நிலையம்

வவுனியா, ஒக்.26

வவுனியாவில் கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல உணவகம் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய நேற்று மதியம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வவுனியா வடக்குப் பகுதியில் மாகா நிறுவனத்தில் இணைந்து வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து கொரோனாத் தொற்றாளர்கள் வந்து சென்றதாகக் கருதப்படும் வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல ஹாட்வெயார் , பழைய பேருந்து நிலையத்தில் உள்ள புத்தக விற்பனை நிலையம், ஹொரவபொத்தானை வீதியில் உள்ள ஹாட்வெயார் என மூன்று வர்த்தக நிலையங்கள் கடந்த 21ஆம் திகதி தற்காலிகமாக மூடப்பட்டன. மாகா நிறுவனத்தில் இணைந்து வீதி திருத்தப் பணியில் ஈடுபட்டவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்தனர். தற்போது வவுனியா வடக்கில் தொற்றாளர் எண்ணிக்கை 13 ஆக உயர்வடைந்தன் காரணமாக கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் சென்றதாகக் கருதப்படும் வவுனியா கண்டி வீதியில் அமைந்துள்ள பிரபல உணவகமும் நேற்று மதியம் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய தற்காலிகமாக மூடப்பட்டது. (ப-18)

# பிரபல ஹொட்டல்களின் பணிகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக்.26

கொழும்பிலுள்ள பிரபல ஐந்து நட்சத்திர ஹொட்டல்களின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று, நட்சத்திர விடுதிகளின் நிர்வாகங்கள் அறிவித்துள்ளன.

ஹில்டன், கோல்பேஸ் ஹொட்டல்களின் பணிகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

ஹில்டன் ஹொட்டலானது, கடந்த வெள்ளிக்கிழமை முதல் தனது பணிகளை இடைநிறுத்தியுள்ளது எனத் தெரியவருகிறது.

இந்தக் ஹோட்டலை அண்மித்த பகுதியில், கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளார் என்று, கொழும்பு மாநகர சபை உறுதிப்படுத்தியுள்ள நிலையில், குறித்த தொற்றாளர் ஹொட்டல் வளாகத்தைச் சேர்ந்தவரா என்பது தொடர்பில் இதுவரை உறுதிப்படுத்தவில்லை என்றும் இது தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கோல்பேஸ் ஹொட்டலின் அனைத்துப் பணிகளையும் இடைநிறுத்துமாறும் ஹொட்டலில் பணியாற்றும் சகல ஊழியர்களையும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் ஹொட்டல் நிர்வாகத்துக்கு அறிவுறுத்தியுள்ளனர் எனத் தெரியவருகிறது. (ற-இ)

# 'பாதுகாப்பை உறுதிப்படுத்துக' பொடி லெசி நீதிமன்றில் மனு

கொழும்பு, ஒக்.26

பாதாள உலகக் குழுத் தலைவரான ஜனித் மதுசங்க எனப்படும் பொடி லெசி தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்றும் இதனால் தனது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தல் கடிதம் அனுப்பியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தவிசாளர் நீதிபதி ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் யோஷித ராஜகருணா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாமால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுவை மீண்டும் எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள பூஸா சிறைச்சாலை அதிகாரி, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம், பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டவர்களுக்கு எதிராக அறிவித்தல் கடிதத்தை அனுப்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற-இ)

# ஷங்கரிலா ஹொட்டல் ஊழியருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.26

கொழும்பிலுள்ள ஷங்கரிலா ஹொட்டல் ஊழியர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஹொட்டல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பிலான முழுமையான அறிக்கை ஒன்றை ஹோட்டல் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, எமது ஊழியர்களை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தினோம். கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படவில்லை எனினும் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-இ)

# பிரபாகரன் வரலாற்றில் 'சீறும் புலி' திரைப்படம்

கொழும்பு, ஒக்.26

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை மையப் படுத்தி 'சீறும் புலி' என்ற பெயரில் தமிழ் திரைப்படம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திரைப்படத்தில் தேசிய விருது வென்ற நடிகர் பொபி சிம்ஹா, வேலுப்பிள்ளை பிரபாகரனின் கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கவுள்ளார்.

இந்த திரைப்படத்தை நீலம் திரைப்பட இயக்குநர் ஜீ.வெங்கடேஷ்குமார் இயக்குகிறார்.

இதற்கு முன்னதாகவே அவர், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றை, இரண்டு பாகங்களாக திரைப்படமாக உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அறிவித்திருந் தார் எனத் தெரியவருகின்றது. (ற-இ)

# களுபோவில மருத்துவமனை ஊழியர்களுக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.26

களுபோவில மருத்துவமனையில் 6 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனையடுத்து மருத்துவமனையின் அவசர விபத்துப் பிரிவு, 23 மற்றும் 7 ஆவது விடுதிகள், வெளிநோயாளர் பிரிவு என்பன தற்காலிகமாக மூடப்பட்டன. பின்னர் அவை கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன என்று களுபோவில மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** மேலதிகாரிகளிடம் இருந்து சில யுக்திகளை கற்றுக்கொள்வீர்கள். உங்களது அலட்சியப் போக்கினால் பிறருக்கு வருத்தம் ஏற்படலாம். வாழ்க்கைத் துணையின் உடல்நலனில் கவனம் கொள்ளுங்கள்.

**இடபம்:** சுப நிகழ்ச்சிகளின் பொருட்டு அலைய நேரிடலாம். வரவைக் காட்டிலும் செலவு கூடும். வளர்ச்சி தென்படும் நாள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டி கொடுத்து வேலை வாங்குவது நல்லது.

**மிதுனம்:** புதிய மருத்துவத்தால் உடல் நலம் சீராகும். குழந்தைகளின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதால் நிம்மதி நிலவும். வம்பு வழக்குகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

**கடகம்:** பணியாளர்களின் முயற்சிகளில் சிறு சிறு தடைகள் ஏற்படும். சகோதர, சகோதரிகளுக்குள் சிறு கருத்து வேற்றுமை தோன்றும் தைரியமாக முடிவெடுக்கும் நாள். தடைகள் அகலும்.

**சிம்மம்:** இதமாய்ப் பேசி எதையும் நல்ல படியாக முடித்துக் கொள்வீர்கள். பாகப்பிரிவினைகள் பற்றி முடிவெடுக்க வேண்டிவரக்கூடும். வாழ்க்கைதுணையின் பணியில் வந்த பிரச்சினை அகலும்.

**கன்னி:** அரசியல் ஈடுபாட்டால் எதிர்பாராத அனுகூலம் உண்டு. பணி பற்றிய முயற்சியில் தடைகள் அகலத் துவங்கும். நல்லவர்களை சந்தித்து உதவி பெற்று மகிழ்வீர்கள்.

**துலாம்:** பணிச்சுமை அதிகரிக்கும். புதிய நம்பிக்கை பிறக்கும். தொழில் வளர்ச்சிக்கு வேறுமொழி பேசுபவர் ஒத்துழைப்பார். முயற்சிகளில் ஏற்படும் தடை பற்றிய கவலை வரும்.

**விருச்சிகம்:** எடுத்த முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். கடன் தீரும். முக்கியப் பணிகளை மற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். புதிய நட்பு மலரும். வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**தனுசு:** வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். யாருடைய சொந்த விஷயங்களிலும் தலையிட வேண்டாம். இளைஞர்கள் பெற்றோர்களின் பாச மழையில் நனைவீர்கள்.

**மகரம்:** புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். புதிய உடைகள், நகைகள் வாங்கும் யோகம் உண்டு. வரவு திருப்தி தரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும்.

**கும்பம்:** தொழிலில் முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வு வரும். சில நேரங்களில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பதவியில் உள்ளவர்களின் ஆதரவு உண்டு.

**மீனம்:** குடும்பத்தில் ஒருவருக்குத் திருமண வாய்ப்பு கைகூடும். பிரிய மானவர்களின் அன்பு கிடைக்கும். மனம் நிம்மதியுறும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் உண்டு.

# மாத்தளை நகரில் முதல் தொற்றாளர்



மாத்தளை, ஒக்.26

மாத்தளை நாவுல நகரில், முதல் கொரோனாத் தொற்றாளர், நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளார். நாவுல நகருக்கு அருகில் மீன் விற்பனை நிலையமொன்றை நடத்திச் சென்ற நபர் ஒருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இந்த மீன் விற்பனை நிலையத்திலுள்ளவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்ட போதே, இந்த நபருக்கு கொரோனா தொற்றியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அவரது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவருடன் தொடர்பைப் பேணியவர்களைக் கண்டறிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

நாவுல பிரதேச செயலகம், பொலிஸார், பொது சுகாதார பரிசோதகர்கள் இணைந்து, நாவுல பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (ற-இ)

# கொழும்பு துறைமுக நுழைவாயில்கள் மூடல்

கொழும்பு, ஒக்.26

கொழும்பு துறைமுகத்தின் நான்கு நுழைவாயில்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகத்துக்குள் செல்லும் பிரதான நுழைவாயிலில் கடமையாற்றிய சுங்க பரிசோதகர்கள் இருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுடன் கடமையாற்றிய நாற்பது பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை துறைமுகத்துக்கு ஆட்கள் வருவதும் குறைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தினமும் துறைமுகத்தின் தலைமையகத்துக்கு வருவோரின் எண்ணிக்கை 50 ஆக குறைக்கப்பட்டுள்ளது. (ற-இ)

# இந்திய கடலோரப் படையினரால் இலங்கைப் படகு சிறைப்பிடிப்பு

கொழும்பு, ஒக்.26

இலங்கையின் மீன்பிடி படகு ஒன்றை, இந்தியக் கடலோர காவல்படையினர் கைப்பற்றியுள்ளனர் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தியக் கடலில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோதே இந்தப் படகு கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தப் படகிலிருந்த ஆறு பேர் இந்திய கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட இந்தப் படகு நேற்று காரைக்கால் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இவர்கள் விரைவில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் என்று இந்திய ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற-இ)

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோருக்கு கடும் தண்டனை

கொழும்பு, ஒக்.26

இலங்கையில் பல பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளை மீறிச் செயற்படும் பொதுமக்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரம் அடைந்து வரும் நிலையிலேயே, இந்த தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

ஏதாவது ஒரு வகையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்பட்டால் அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தள்ளார். (ற-இ)

## கொரோனா எதிரொலி:

# மூன்றரை லட்சம் கிலோ மீன்கள் தேக்கம்

கொழும்பு, ஒக்.26

இலங்கையில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக, சுமார் மூன்றரை இலட்சம் கிலோகிராம் நிறையுடைய மீன்கள், மீன்பிடிப் படகுகளிலேயே தேங்கியுள்ளன என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

பேருவளை மற்றும் காலி மீன்பிடித் துறைமுகங்களிலுள்ள சுமார் 53 படகுகளிலேயே இந்த மீன்கள் தேங்கியுள்ளன.

இந்த நாட்டின் மீன்பிடித்துறையை தொடர்ந்து நடத்திச்செல்ல வேண்டும் என்றும் அதனால், மீன்பிடித் துறைமுகங்களை, தொற்று நீக்கங்களுக்கு உட்படுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சுகாதார அமைச்சர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ற-இ)

# தரச் சான்றிதழ் துஷ்பிரயோகம்; ரின் மீன் உற்பத்தி நிலையம் ‘சீல்’

கொழும்பு, ஒக்.26

போலிச் சான்றிதழ்கள் மூலம் சந்தைக்கு விநியோகிக்கப்படவிருந்த ரூபா 50 லட்சம் பெறுமதியான ரின் மீன்களை புத்தளம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். முந்தலம பிரதேசத்திலுள்ள உற்பத்தி நிலையமொன்றிலிருந்து இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

எஸ்.எல்.எஸ் தரச் சான்று துஷ்பிரயோகம் செய்யப்பட்டு ரின் மீன்களில் ஒட்டப்பட்டுள்ளது எனக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டில் நடத்தப்பட்ட தேடுதலில் இவை கைப்பற்றப்பட்டுள்ளன. இதையடுத்து உற்பத்தி நிலையம் சீல் வைத்து மூடப்பட்டுள்ளது.

மேலும் கைப்பற்றப்பட்ட ரின் மீன்கள் பாவனைக்கு உகந்த நிலையில் உள்ளமையால் சான்றிதழைச் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழேயே அந்த நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ-இ)

# “தம்பாள” கிராமத்துக்குள் எவரும் நுழைய வேண்டாம்

## ஆதிவாசிகளின் தலைவர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.26
தம்பான ஆதிவாசிகள் கிராமத்துக்குள் சுற்றுலாப் பயணிகள் வருவதைத் தடை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஆதிவாசிகளின் தலைவர் வன்னில எத்தோ தெரிவித்துள்ளார்.

ஆதிவாசிகளின் சுகாதார பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு, அரசு மற்றும் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனையில் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, ஆதிவாசிகளின் அருங்காட்சியகம் உள்ளிட்ட ஆதிவாசிகளின் கிராமங்களுக்கு சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்காதிருக்கத் தீர்மானித்துள்ளோம்.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், குறைந்தளவு சுகாதார வசதிகளையுடைய மக்களைப் பாதுகாப்பதற்காக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(க-இ)

## 24 மணிநேரத்தில் 89 பேர் குணமடைவு

கொழும்பு,ஒக்.26
நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து கடந்த 24 மணித்தியாலத்தில், மேலும் 89 பேர் குணமடைந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதற்கமைவாக நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 803 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள 7 ஆயிரத்து 521 பேரில், 3 ஆயிரத்து 803 பேர் தொடர்ந்தும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்தோடு 481 பேர் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் மருத்துவக் கண்காணிப்பில் உள்ளனர். (க-இ)

## கண்டி மத்திய சந்தைக்கும் பூட்டு

கண்டி,ஒக்.26
கண்டி மத்திய சந்தைத் தொகுதியிலுள்ள மீன் விற்பனை நிலையங்களை, தற்காலிகமாக மூடுவதற்கு கண்டி மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பேலியகொட உள்ளிட்ட பல இடங்களிலிருந்து கண்டிச் சந்தைக்கு மீன் விற்பனைக்காகக் கொண்டு வரப்படுவதால், தொற்றுப் பரவ வாய்ப்புள்ளதைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று கண்டி நகர ஆணையாளர் அமில நவரத்ன தெரிவித்துள்ளார்.

சந்தைத் தொகுதி மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் பி.சி.ஆர். பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பரிசோதனையின் முடிவுகளுக்கமைய வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)



## மரக்குற்றிகள் கடத்தல்: சந்தேகநபர் இருவர் கைது

வவுனியா,ஒக்.26
வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிடாச்சூரி பகுதியில் சட்ட விரோதமான முறையில் ஏற்றிச் செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகள் நேற்றுக் கைப்பற்றப்பட்டன.

முதிரை மரங்கள் கடத்தப்படுகின்றன என்று பூவரசங்குளம் விசேட அதிரடிபடையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து, அங்கு சென்ற விசேட அதிரடிப் படையினர் மரக்குற்றிகளை மடக்கிப் பிடித்தனர்.

சம்பவத்தில் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான 7 பெரிய மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவற்றைக் கடத்திச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்திய கப் ரக வாகனத்தையும் கைப்பற்றினர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-ரி3)

## களுத்துறையில் ஊரடங்கு தளர்வு

கொழும்பு,ஒக்.26
களுத்துறை மாவட்டத்தில் பேருவளை, பயாகல, அளுத்கம பகுதிகளுக்கான ஊடரங்கு இன்று திங்கட்கிழமை காலை 5 மணிக்கு தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை மீகஹதென்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 5 கிராமங்களுக்கு போக்குவரத்துக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

வேதவத்த, மகாலந்தாவ தெற்கு, மகுருமஸ்வில, குலாவிட்ட வடக்கு மற்றும் குலாவிட்ட தெற்கு ஆகிய 5 கிராமங்களுக்கே இவ்வாறு போக்குவரத்துக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் தொடங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெபிலியவத்த கிராமத்திலும், சுமார் 50 வீடுகளுக்கு போக்குவரத்துத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## அந்த அதிசய கிழவர்!



சுகி.சிவம்

அரசியலிலும் சரி, நிறுவனங்களிலும் தலைமைக்கு வேண்டியவராகச் சிலர் விளங்குவார்கள். தலைமையின் நம்பிக்கைக்கு உரியவராகச் செல்வாக்கு உள்ளவராக வலம் வருவார்கள். இத்தனைக்கும் சீனியாரிட்டிபடிப் பார்த்தால் மிகப் பின்தங்கியவராக இருப்பார். ஆனால் அவர் செல்வாக்குக் கொடிகட்டிப் பறக்கும். இது எப்படி நடக்கிறது?

இதைச் சிலர் கொச்சையாகக் “காக்காய் பிடித்து முன்னுக்கு வருகிறான்” என்கிறார்கள். ஆனால் நுட்பமாக, முன்னுக்கு வரும் இரகசியத்தைக் கவனிக்க மறுக்கிறார்கள். நீங்கள் முக்கியமான நபராக விளங்க நிறைய வழிகள் இருக்கின்றன. அதைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன்.

திருமண வீடுகளில், அலுவலகங்களில், விழாக்களில் சிலரைச் சுற்றிக் கூட்டம் எப்போதும் இருக்கும். அவர் இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும். “குபீர் குபீர்” என்று சிரிப்பலைகள் அவரைச் சுற்றி எழும். எந்த இடத்திலும் முக்கியத்துவம் பெற்றுவிடுவார். காரணம், சாமர்த்தியமாக, நகைச்சுவையாக அவர் பேசுவதே.

எனவே நல்ல நகைச்சுவைகளைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்பப் பயன்படுத்துகிறவர்களை எல்லோரும் நேசிப்பார்கள். ஒரு முக்கியமான மனிதராகக் கருதுவார்கள்.

ஆனால் நகைச்சுவை தரம் உடையதாக, புதிது புதிதாக, நினைத்து நினைத்துச் சிரிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பலர் மத்தியில் சொல்லத் தகாத ஆபாசத் துணுக்குகளை, இடத்துக்குப் பொருந்தாத நகைச்சுவைகளைச் சொன்னால் இருக்கிற மரியாதையும் போய்விடும்.

இன்னும் கொஞ்சம் அதிக முக்கியத்துவம் பெறும் வழி என்ன? நகைச்சுவைகளைக் கடந்து அதிக தகவல்களைத் தெரிந்து வைத்திருக்கும் ஒருவர் இன்னும் முக்கியத்துவம் பெறுவார். ரயில் நேரம், விமான நேரம், பொருள்களின் விலை, எது எங்கே சுலபமாகக் கிடைக்கும் என்ற தகவல், நுட்பமான பல விவரங்களை அறிந்து வைத்திருந்தால் உங்கள் மேலதிகாரிகளால் நீங்கள் மிகவும் விரும்பப்படுவீர்கள். நிறைய விவரங்களைக் கைவசம் வைத்திருக்கும் நபர் தலைமையால் அதிகம் தேடப்படுவார். தலைமை அவரை அதிகம் சார்ந்திருக்க விரும்பும். பல்கலைக் கழகத்தில் மிக நீண்ட காலம் ஒரு பெரியவர் பணி புரிந்தார். அவரை மிக நீண்ட காலம் பணி நீடிப்புக் கொடுத்து வைத்திருந்தனர். ஒரே காரணம்... அவர் பல்கலைக் கழகம், பரீட்சை, துறைகள் எது பற்றிய கேள்விக்கும் விரல் நுனியில் விடை வைத்திருப்பார்.

துல்லியமாக, கோபம், பதற்றம் இன்றி உடனுக்குடன் விடையளித்த அந்த அதிசயக் கிழவரை என்னால் மறக்கவே முடியாது. அதிக விவரங்கள் அறிந்த மனிதர் தன் முக்கியத்துவத்தை ஒரு போதும் இழக்க முடியாது.

நிரந்தர முக்கியத்துவம் பெறுவதற்கான உன்னத மாமந்திரத்தை இப்போது சொல்லுகிறேன். Involvement makes you important. ஈடுபாடு ஆழமாக ஆழமாக மேம்பாடு நிச்சயம். இதனை உணர்ந்தவர்கள் தோற்பதில்லை. ஒரு திருமண வீட்டுக்கு ஆயிரம் பேர் வந்து போனாலும், அக்கறையுடன் பல விடயங்களில் ஈடுபடுகிறவர் மறக்கப்பட முடியாதவராக மாறிவிடுகிறார்.

திருமணத்தின் ஒவ்வொரு சடங்கிலும், ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு இடத்திலும் அந்த நபர் தேடப்படுகிறார். அவரை மையப்படுத்தி அங்கு நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கும். கட்சியில் கடைசியில் சேர்ந்த ஒருவர் அளவு கடந்த ஈடுபாடு காட்டும்போது அவர் முக்கியத்துவம் பெற்று முன்னேறுகிறார்.

தலைவருக்கு இரண்டாம் இடத்தில் இருக்கும் சிலர், தலைவரின் மறைவுக்குப் பின்னும் இரண்டாம் இடத்தில் இருக்க நேரிடும். ஆனால் கடைசியில் வந்தவர் முதல் இடத்தைப் பெற்றுவிடுவார். இரண்டாம் இடத்தார் புலம்புவார். 'நான்தான் சீனியர்' என்பார். என்ன பயன்? அவருக்கு எப்போதும் இரண்டாம் இடமே கிடைக்கும். கட்சியின் மீது அவரது ஈடுபாடு இரண்டாம் பட்சம். எனவே கட்சிக்கும் அவர் இரண்டாம் பட்சம்.

கல்லூரியில் வேலைக்குச் சேரும் ஒருவர், தனது துறையின் வேலைகளை மட்டும் அளந்து செய்தால், நிர்வாகம் அவருக்குச் சம்பளம் கொடுக்கும். மரியாதை கொடுக்காது. தனது பணி, தனது துறையில் பிறரது பணி, மாணவர்கள் பிரச்சினை, கல்லூரி விழாக்கள், கட்டட நன்கொடை இப்படி எல்லா வேலையையும் தனது வேலையாக இழுத்துப் போட்டுக்கொண்டு செய்கிறவர் நிர்வாகம் நம்பிக்கைக்குரியவர் ஆகிறார். நியமிக்கப்படாத முதல்வராக முக்கியத்துவம் பெறுகிறார். எந்த விடயத்திலும் ஈடுபாடும் மேம்பாடும் கைகோர்த்து நிற்கின்றன. முக்கியதுவமும், முதலிடமும் முழு மூச்சுடன் ஈடுபட்டவருக்கான உரிமைச் சொத்து. புரிந்து கொண்டால் வெற்றி நிச்சயம்.

# நாங்கள் எப்போதுமே '20'க்கு எதிரானவர்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் உறுதி

**கொழும்பு, ஒக்.26**

**நாம் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரானவர்கள் என்பதில் இன்னும் உறுதியாகவே இருக்கின்றோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"நாம் சட்டத்துக்கு எப்போதும் மதிப்பளிப்பவர்கள். எமது காலத்தில் பல ஆணைக்குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இவை மக்களுக்குத் தெரியும். இது தொடர்பாக நான் தனிப்பட்ட ரீதியாக விமர்சிக்க விரும்பவில்லை. நாம் அன்று பல செயற்பாடுகளை மக்களுக்காகச் செய்தோம். எனவே, ஆணைக்குழுக்களை அவதானிக்கவும் அதனை விமர்சிக்கவும் எமக்கு காலம் இருக்கவில்லை. இன்று 20 ஆவது திருத்தச்சட்டம் நிறை வேற்றப்பட்டுள்ளது. நாம் இதற்கு எதிரானவர்கள் என்பதில் இப்போதும் உறுதியாக இருக்கிறோம்.

எனினும், எமது அணியிலிருந்து சிலர் இதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளார்கள். இவர்களுக்கு எதிராக நாம் நிச்சயமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்போம். இது தொடர்பாக சபாநாயகருக்கும் விரைவில் அறிவிக்கவுள்ளோம். இவ்வாறான ஏமாற்று வேலைகள், அரசியல் வரலாற்றில் புதிதல்ல. ஒருவரது தனிப்பட்ட முடிவை நாம் விமர்சிக்க முடியாது. எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு முரணாக செயற்பட்ட காரணத்தினால் தான், குறித்த நபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இவ்வாறான செயற்பாடுகளால், நாம் என்றும் பின்னடைவை சந்திக்கப் போவதில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# கம்பஹாவில் இன்று வங்கிகள் திறக்கப்படும்

கம்பஹா.ஒக்.26

கம்பஹா மாவட்டத்தில் உள்ள அனைத்து அரச மற்றும் தனியார் வங்கிக் கிளைகள் இன்று திறந்திருக்கும் என்று கொவிட் 19 வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

வங்கிக் கிளைகளைத் திறப்பதற்குத் தேவையான அலுவலர்கள் தமது நிறுவன அடையாள அட்டையைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைக்கு வருகை தர முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கம்பஹா மாவட்டத்தில் பொது மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இன்று காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் திறந்திருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கு-இ)

# மெனிங் சந்தைக்கு தொடர்ந்து பூட்டு?

கொழும்பு, ஒக்.26

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக கொழும்பு மெனிங் சந்தை நவம்பர் முதலாம் திகதிவரை மூடப்படவுள்ளது என மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி முதல் எதிர்வரும் திங்கட்கிழமை வரை மெனிங் சந்தை மூடப்படும் என ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் தற்போது இந்தப் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியை அடுத்து பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில், மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை மற்றும் பேலியகொட மீன் சந்தை ஆகியவற்றில் ஏற்பட்ட வைரஸ் பரவல் காரணமாக தொழிற்சாலைகள், துறைமுகங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகள் முடக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கொழும்பில் பிரதான மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள மெனிங் சந்தையையும் மூடுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# கொரோனா தனிமைப்படுத்தலுக்கு கிழக்கில் 12 இடங்கள் அடையாளம்

*ஊடக சந்திப்பில் வியாழேந்திரன் தெரிவிப்பு*

மட்டக்களப்பு, ஒக்.26

கொரோனா வைரஸ் தொற்று சந்தேகநபர்களை தனிமைப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாணத்தில் 12 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற விசேட கூட்டத்தினைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும், கொரோனாத் தொற்று அதிகரிக்கும்போது அடுத்த கட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விசேட கூட்டத்தில் ஆராயப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். இதேவேளை, தேசிய கொரோனா செயலணியுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அடுத்தகட்ட செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் குறித்த ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

அத்துடன், கொரோனாத் தொற்று பாதிப்புள்ள பகுதிகளில் சில நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கும் தீர்மானத்தினை தேசிய கொரோனா செயலணியே மேற்கொள்ளும் எனவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அழகையா லதாகரன் தெரிவித்துள்ளார். (ந-இ)

# துமிந்தவுக்கு பொதுமன்னிப்பு?

## எம்.பிக்கள் கையெழுத்துடன் ஜனாதிபதிக்கு மனு



கொழும்பு, ஒக்.26

மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி அங்கொடை, முல்லேரியா பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தொழிற்சங்க விவகார ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வரை சுட்டுக்கொலை செய்த குற்றத்திற்காக துமிந்த சில்வா உள்ளிட்ட குற்றவாளிகளுக்கு மரண தடண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, மரண தண்டனையை உயர் நீதிமன்றம் இன்று உறுதிப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், அண்மையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின்போது பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ள மனுவொன்று அரச பிரதம கொறடாவின் ஊழியர்களால் வழங்கப்பட்டுள்ளது என அரச தரப்பு ஆங்கில ஊடகம் அறிக்கையிட்டுள்ளது. அத்தோடு இந்த மனு ஜனாதிபதியிடம் செல்லும்போது, துமிந்த சில்வாவின் விடுதலை உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிய வருகின்றது.

கடந்த அரசாங்கத்தில் சுவீடன் நாட்டுப் பெண் ஒருவரை கொலைசெய்த குற்றம் நிரூபிக்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்தார். அத்துடன் மிருசுவில் படுகொலை சம்பவத்துடன் தொடர்புடைய மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் இராணுவ சிப்பாய் சுனில் ரத்னாயக்க கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவினால் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-இ)

# நீச்சல் தடாகத்தில் வீழ்ந்து பெண்ணொருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.26

ஹபரன பகுதியில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றின் பெண் ஊழியர் ஒருவர் நீச்சல் தடாகத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

விடுதியை சுத்தம் செய்யும்பணியில் ஈடுபட்டபோதே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நீச்சல் தடாகத்தை சுத்தம் செய்து கொண்டிருந்த அந்தப் பெண மாரடைப்பால் தடாகத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் தரப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# சுற்றுலாத்துறையை திறக்க அமைச்சரவை அனுமதி?

கொழும்பு, ஒக்.26

நாடு முழுவதும் கொரோனாத் தொற்று தீவிரமடைந்து வரும் நிலையில், ரஷ்யா மற்றும் ஜேர்மனியிலிருந்து தலா 50 பேர் கொண்ட குழுக்களை இலங்கைக்கு சுற்றுலாவுக்கு அழைப்பதற்கு சுற்றுலாத் துறை அமைச்சு அமைச்சரவையின் ஒப்புதலைக் கோரியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், சுற்றுலாப் பயணிகளுக்காக ஒரு சில தென் மாகாண விருந்தகங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். சுற்றுலாப் பயணிகள் நாடு முழுவதும் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதற்கு 14 நாள்களுக்கு முன்னர், பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இவர்கள் ஹோட்டலில் தங்க வைக்கப்படுவதுடன் அதை அண்மித்த கடற்கரைப் பகுதியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள். அதே நேரத்தில் உள்ளூர் மக்களுடன் தொடர்பு கொள்வதைத் தடுக்க கடற்கரை பகுதியையும் ஹோட்டலையும் பாதுகாக்க இராணுவத்தின் உதவி கோரப்படும் என்று அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# நாட்டில் பொருள்களுக்கு தட்டுப்பாடு இல்லை

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.26**
**நாட்டில் அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு எதுவும் இல்லை என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**


பொதுமக்கள், தேவையில்லாமல் உணவுப் பொருள்களைச் சேமித்து வைக்க வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமையால், பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுமென்ற அச்சத்தில் பொதுமக்கள் பொருள்களை அதிகளவு கொள்வனவு செய்வது வருகின்றனர். இந்நிலையிலேயே அமைச்சர் பந்துல குணவர்தன மக்களுக்கு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.
மேலும்,"சதொச நிறுவனங்களில் 600 ரூபாக்கு மேற்பட்ட அளவில் பொருள்களை கொள்வனவு செய்பவர்களுக்கு மாத்திரமே சீனி கிலோ ஒன்று 85 ரூபாக்கு வழங்கப்படும். சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் அதிகமாக சீனிகளை கொள்வனவு செய்வதனால் இந்த நடவடிக்கை முன்னெ டுக்கப்பட உள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)





# வவு.பொதுச்சந்தை தொற்று நீக்கம்

வவுனியா, ஒக்.26
கொவிட் -19 தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வவுனியா நகரசபையினரால் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.
பொதுமக்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படும் பகுதியான வவுனியா பொதுச்சந்தையில் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட வேண்டுமென உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தினர் விடுத்த கோரிக்கைக்கமைய வவுனியா நகரசபைப்யினரால் பொதுச் சந்தை நேற்றுக் காலை தொற்று நீக்கம் செய்யப்பட்டது.
நகரசபை பொது முகாமைத்துவ உதவியாளர் துரைராஜ் சபேசன் தலைமையில் பொதுச்சந்தையின் முன்பகுதி , பின்பகுதி என்பன தண்ணீர் அடித்து சுத்தப்படுத்தப்பட்டதுடன் மருந்தும் வீசப்பட்டது. (ந-18)






# நல்லூர் கந்தனில் மானம்பு உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக்.26
விஜயதசமி நாளான நேற்றைய தினம் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் முருகன் ஆலயத்தில் மானம்பு உற்சவம் விமரிசையாக இடம்பெற்றது. நேற்று காலை 6.45க்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முருகப்பெருமான் குதிரை வாகனத்தில் எழுந்தருளி மானம்பூ உற்சவம் இடம்பெற்றது.
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நல்லூரின் பண்டைய காலத்தில் உபயோகிக்கப்பட்ட பழைமையான சிறிய குதிரை வாகனத்தில் முருகப் பெருமான் எழுந்தருளி, அமைதியான முறையில் சிறப்பாக மானம்பூ உற்சவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-20)



# வாழைச்சேனை துறைமுகத்துக்கு 'சீல்'

வாழைச்சேனை, ஒக்.26
வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகள் நேற்று முன்தினம் முதல் தனிமைப்படுத்தல் வலயமாக பிரகடனப்படுத் தப்பட்டுள்ளன.
இதனையடுத்து வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்துக்குச் சீல் வைக்கப்பட்டுள்ளது.
வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-இ)



கலென்பிந்து நுவேவா ரித்திகல வனப் பகுதியில் அரிய வகை மலைப்பாம்பொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பாம்பு தற்போது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது என வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் கூறியுள்ளனர். (ந-இ)

# அமெ.இராஜாங்க செயலாளர் 27இல் இலங்கை விஜயம்

கொழும்பு, ஒக்.26
இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் அழைப்பின் பேரில் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஆர்.பொம்பியோ எதிர்வரும் 27 மற்றும் 28 இல் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.
இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகியோருடன் அதிகாரபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.
இந்த விஜயத்தின் போதான கலந்துரையாடல்கள் இரு நாடுகளுக்குமிடையிலான பன்முக ஈடுபாட்டின் பல பகுதிகளை உள்ளடக்கும்.
அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யும் மிக உயர்ந்த அமெரிக்க பிரமுகர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)


# தாயகம் திரும்பினர் 26 இலங்கையர்

கொழும்பு, ஒக்.26
கொரோனா பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் ஒரு தொகுதி இலங்கையர்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்துள்ளனர்.
கட்டாரில் இருந்த 26 பேரே இவ்வாறு நாட்டை வந்தடைந்துள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-இ)

> ஜே.ஆரின் நிறைவேற்றதிகாரக் கொள்கைக்கு யாரெல்லாம் எதிர்ப்புக் காட்டிவந்தவர்களோ அவர்களே தற்போது மீண்டும் ஜே.ஆர். அப்போது தம்வசம் வைத்திருந்த அதிகாரங்களை இன்றைய ஜனாதிபதிக்கு 20 ஆம் திருத்தத்தின் மூலம் கொடுத்திருக்கிறார்கள். உலகம் ஒரு உருண்டைதான் போலும்.

■ வீ.எஸ்.ரி.

# எதிர்த்தவர்களே ஏற்றுக் கொண்டார்கள்!



ஒருவர் முன்வைத்த கொள்கையை எதிர்த்தவர்கள், அந்த நபர் இறந்த பின்னர் அதே கொள்கையை ஏற்றுக்கொண்டால், அதனை உருவாக்கியவர் மேலுலகத்தில் இருந்தாலும் மகிழ்வெய்தத்தானே செய்வார். அப்படி ஒரு மகிழ்ச்சி இப்போது அமரர் உலகில் இருக்கும் ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு கிடைத்திருக்கி றது.

1978ன் இல் ஜே.ஆர் கொண்டுவந்த நிறைவேற்றதிகார முறைமையில் கூட, நாடாளுமன்றத்துக்கு ஜனாதிபதி பொறுப்புக் கூற வேண்டி யிருந்தது. இருந்த போதிலும் அவரது செயற்பாடுகள் குறித்து நேரடியாகக் கேள்வியெழுப்ப எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டி ருக்கவில்லை. அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினரொருவரோ அல்லது வேறெந்த சபையொன்றின் உறுப்பினரோ ஜனாதிபதியை விமர்சிக்க சட்டம் இடமளிக்காது .அவ்வாறு விமர்சிக்க வேண்டுமாயின் தாம் அங்கம் வகிக்கும் சபையில் அது குறித்த பிரேரணையொன்றை முன்வைத்தல் அவசியம்.

## விவாகரத்துக்கும் வழியில்லை

ஜனாதிபதி உத்தியோகபூர்வமாகவோ அல்லது தனிப்பட்ட வகையிலோ மேற்கொள்ளும் நடவடிக்கையொன்றுக்கு எதிராக அவர்மீது நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுக்க இயலாதென்பது அந்த அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள பாரதூரமானதொரு விடயமாகும். சட்டத்துக்கமைய ஜனாதிபதியொருவர் செயற்பட வேண்டுமெனவும், நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் கடப்பாடு கொண்டுள்ளாரெனவும் அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இந்த விசேட வாய்ப்புக் காரணமாக அவரால் தாம் விரும்பும் எதனையும் மேற்கொள்ள முடியும். அப்படிச் செய்வதைக் கூட நீதிமன்றில் கேள்விக்கு உள்ளாக்க இயலாது. இது விடயம் தொடர்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் முத்தட்டுவேகம ஒரு சமயம் நாடாளுமன்றில் உரையாற்றும் போது “எதிர்காலத்தில் பதவி வகிக்கும் ஜனாதிபதியொருவரது மனைவியால் தமது கணவருக்கு எதிராக மணநீக்க வழக்கொன்றையோ ஜீவனாம்ச வழக்கொன்றையோ கூடத் தொடுக்க அரசமைப்பின் கீழ் இடமில்லை" எனக் கிண்டலாகக் குறிப்பிட்டமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

## முற்கூட்டிய ராஜினமாக் கடிதங்கள்

ஜனாதிபதி ஜே.ஆர்.ஒரு சர்வாதிகாரி போன்று செயற்பட்டார். அரசமைப்பு மூலம் தமக்கு மட்டற்ற அதிகாரங்கள் கிட்டியிருந்ததால் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அச்சுறுத்தி தாம் விரும்பும் விதத்தில் அவர்களைச் செயற்படவைத்தார். திகதியிடப்படாத ராஜினாமாக் கடிதங்களை அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு,எந்த வேளையிலும் அதில் திகதியிட்டு குறித்த நாடாளுமன்ற உறுப்பினரை அவரது பதவியினின்றும் வெளியேற்றும் வாய்ப்பையும் அவர் உருவாக்கி வைத்திருந்தார். 1987ஆம் ஆண்டில் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை நிறைவேற்ற அரச தரப்பு உறுப்பினர்களது ஆதரவைப் பெறுவதற்கு அவருக்கு அந்தத் திகதியிடப்ப டாத ராஜினாமாக் கடிதங்கள் உதவின.

## பொதுஜன வாக்கெடுப்பும் நாடாளுமன்ற நீடிப்பும்

இவை மட்டுமன்றி இலங்கை அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் நாடாளுமன்றத்தின் ஆயுள் காலத்தை நீடிப்பதற்கு ஜே.ஆர்.தமது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டார். நாடாளுமன்றத் தேர்தலை ஒத்தி வைக்க சட்டத்தில் இடமிருக்கவில்லை. ஆனால் நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடிக்க வேண்டுமானால் அதற்காக பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தி நாட்டு மக்களது ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள இயலும். இந்த அரசமைப்பு விதியைப் பயன்படுத்தி அவர் தமது நோக்கத்தை நிறை வேற்றிக் கொண்டார். ஆறு ஆண்டுகள் காலத்துக்கு நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை நீடிப்பதற்கான ஒப்புதல்பெற 1982ஆம் ஆண்டில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி 1989ஆம் ஆண்டுவரை நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தை ஜே.ஆர்.நீடித்துக்கொண்டார்.

குறித்த பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பில் வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கை இருக்குமானால் பொதுத் தேர்தலையே நடத்தி மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கலாமே என்ற கேள்வி இந்த இடத்தில் எழுவது நியாயமா னதே.

ஆனால் ஜே. ஆரின் அப்போதைய இலக்கு, நாடாளுமன்றில் அரசுக்கிருந்த ஆறில் ஐந்து மடங்கு பெரும்பான்மையைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்பதே. இதனால் ஒரு நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி முடிப்ப தற்கான நிதித்தொகையைச் செலவு செய்து, பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்தி அதில் வெற்றி பெற்று ஜே.ஆர்.தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொண் டார்.

## ஊழல் தேர்தல்

அந்தப் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு மற்றும் அதனைத் தொடர்ந்து அதே ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் அரசு தனது சகல அதிகார வளங்களையும் பயன்படுத்தி பல்வேறு குளறுபடிகளைச் செய்தது இதனால் ஊழல் மோசடிகள் இடம்பெற்ற தேர்தல்கள் என அந்தத் தேர்தல் சர்வதேச ரீதியில் அவப்பெயரை ஈட்டிக் கொண்டது.

1981ஆம் ஆண்டில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல், நாட்டின் சட்டதிட்டங்களை கேலிக்கு உள்ளாக்கும் விதத்தில் நடத்தப்பட்டது.யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற வாக்களிப்பைக் குழப்பி அதன் அதிகாரத்தைக் கைப்பற்ற அரசினால் குண்டர்கள் படையொன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தத் தேர்தல் வாக்களிப்புக்கு முந்திய தினம் நள்ளிரவு வேளையில் யாழ்ப்பாண பொது நூலகம் அந்தக்குண்டர் படையினரால் தீயிட்டுக்கொளுத்தப்பட்டது.

## அவசரத்துக்கு பிறந்த ‘மாகாணசபை'!

நீதித்துறை நியமனங்களைக் கூடத் தமது கைகளில் எடுத்துக்கொண்ட ஜே.ஆர், 1987 ஆம் ஆண்டில் நீதித்துறை மீதும் தலையீடு செய்தார்.நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் எந்தவொரு சட்டத்துக்கான திருத்தமும் நாடாளுமன்றத்தாலேயே மேற்கொள்ளப்படவேண்டும்.அதற்கான அதிகாரத்தை நாடாளுமன்றமே கொண்டுள்ளது.

ஆனால் ஜே.ஆர். தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்காமலேயே மாகாண சபைகள் சட்டத்தில் திருத்தத்தை மேற்கொண்டார். மாகாண சபைகள் சட்டத்தின்படி நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் தமிழ்ப் போராளிக்குழுக்கள் அனைத்தும் தமது ஆயுதங்களை அரசிடம் கைளித்ததன் பின்னர், ஒன்றிணைக்கப்படவேண்டுமென உடன்பாடாகியிருந்தது.ஆயினும் விடுதலைப்புலிகள் அமைப்பு மட்டும் ஆயுதக் கையளிப்புக்கு ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டது.ஆனால் இந்திய அரசோ ஒப்பந்தத்தின்படி வடக்கு,கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு மாகாணசபை உருவாக்கப்படவேண்டுமென ஜே.ஆரை வற்புறுத்தியது.


## ஒன்றிணைக்கப்பட்ட வடக்கும் கிழக்கும்

அதன்படி 1988 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதியன்று அவசர காலச்சட்டத்தின் கீழ் குறித்த சட்டப்பிரிவில் திருத்தம் மேற்கொண்டு ஜே.ஆர்.விசேட வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டார்.அதன்படி தனிநாடு கோரிப் போராடும் ஆயுதக் குழுக்களை நிராயுதபாணிகளாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக ஜனாதிபதி திருப்தி யடைவரானால், வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது. அந்த வேளையில் இந்திய அமைதிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல்கள் ஆரம்பித்திருந்தன.1988 செப்ரெம்பர் 8 ஆம் திகதி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒன்றிணைக்கப்பட்டன.

## சிறிமாவின் பதவி பறிப்பு

இதேபோன்று முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக மீது ஊழல் குற்றம் சுமத்தி 1980ஆம் ஆண்டில் சிறிமாவோவின் பிரஜா உரிமையை ஆறு ஆண்டுகளுக்கு இல்லாதாக்கினார் ஜே.ஆர். அதேபோன்று இடைத் தேர்தல் மூலம் கலவான தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக சரத் முத்தட்டுவேகம தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், சட்டத்தைக் கேலிசெய்யும் விதத்தில் அந்தத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக அபேரத்ன பிலபிட்டிய என்பவரை ஜே.ஆர்.நியமித்தார். 1983 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிரான ஜூலை கலவரம் தொடர்பாக பொய்க்குற்றச்சாட்டை சுமத்தி ஜே.வி.பி.,கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் நவசமசமாஜக் கட்சி என்பவற்றை ஜே.ஆர்.ஜெயவர்த்தன தடைசெய்தார். இதன் காரணமாக ஜே.வி.பியினர் மீண்டும் ஆயுதப் போராட்டமொன்றில் இறங்கினர். 1988 மற்றும் 89 ஆகிய ஆண்டுகளில் உக்கிரமடைந்த அந்தக் கிளர்ச்சியால் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இத்தகைய சர்வாதிகாரப் போக்குக் காரணமாகவே 1980-1990 கால கட்டங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி நடைமுறைக்கு எதிராக பெரும் எதிர்ப்பலைகள் நிலவின. அத்தகைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னின்று முன்னெடுத்தோரில் இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச,நிமல் சிறிபாலடி சில்வா,தினேஸ் குணவர்த்தன,வாசுதேவ நாணயக்கார,பந்துல குணவர்த்தன மற்றும் டலஸ் அழகப்பெரும போன்ற பொதுஜன பெரமுன அரசின் முக்கி யஸ்தர்கள் அடங்கியிருந்தனர் என்பது கூடுதல் தகவல்.

பின்னர் ஐ.தே.கட்சி அரசால் உருவாக்கப்பட்ட அந்த அரசமைப்பை ஐ.தே.கட்சியினரே எதிர்த்த போதிலும் அரச துறை மற்றும் நீதித்துறையின் உயர் மட்ட நியமனங்களை மேற்கொள்ளல் மற்றும் பதவியிலிருந்து விலக்குதல் என்பவற்றுக்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்தும் வகையில் 2001ஆம் ஆண்டில் அரசமைப்புக்கான 17ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் தனிநபர் அதிகாரத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்களே , மீண்டும் அந்த அதிகாரத்துக்கு உயிரூட்டி 2010 ஆம் ஆண்டின் 18 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிய விந்தை நிகழ்ந்தது. ஆயினும் 2015ஆம் ஆண்டில் 19ஆவது திருத்தம் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டது. ஆயினும் ஜே.ஆரின் நிறைவேற்றதிகாரக் கொள்கைக்கு யாரெல்லாம் எதிர்ப்புக் காட்டிவந்தவர்களோ அவர்களே தற்போது மீண்டும் ஜே.ஆர். அப்போது தம்வசம் வைத்திருந்த அதிகாரங்களை இன்றைய ஜனாதிபதிக்கு 20 ஆம் திருத்தத்தின் மூலம் கொடுத்திருக்கிறார்கள். உலகம் ஒரு உருண்டைதான் போலும்.



# விஞ்ஞானமும் நாமும்

சா.சர்மிலன்

விஞ்ஞானத்தின் முன்னேற்றம் காரணமாக தற்காலத்தில் விஞ்ஞானக்கல்வி முக்கிய இடத்தை வகிக்கின்றது. எனவே விஞ்ஞானத்தைப் பற்றி அறிந்திருப்பது மிகவும் அவசியமானது. விஞ்ஞானம் என்றால் ஏதோ விண்வெளிப் பயணம் அல்லது அணுவைப் பிளத்தல் போன்ற தப்பான அபிப்பிராயம் நம்மிடையே நிலவுகிறது. இன்று நாம் விஞ்ஞான யுகத்தில் வாழ்கிறோம். காலையிலிருந்து மாலைவரை நித்திரையிலும் விஞ்ஞானத்தினால் தரப்பட்ட பெறுபேறுகளை நாம் அனுபவிக்கிறோம். ஆகவே விஞ்ஞானத்துடனேயே நாம் ஒன்றாக க் கலந்து வாழ்கிறோம். நீங்கள் உங்கள் முன்னிலையில் நடைபெறும் விஞ்ஞான விந்தைகளைக் கண்டு அதிசயப்படுவதுமுண்டு. இன்றைய விஞ்ஞான உலகிலே எத்தனையோ விதமான விஞ்ஞான முன்னேற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. விஞ்ஞானம் ஊடுருவாத இடங்கள் இல்லையென்றே குறிப்பிட வேண்டும். இவ்வாறான விஞ்ஞானம் மனிதனுக்கு இக்காலத்தில் பெற்றுத்தரும் சில விடயங்களைக் கவனிப்போம். மருத்துவத்துறையில் 1968 இல் (CHRISTIAN BERNARD) கிறிஸ்ரியன் பேணாட் என்பவர் ஊயினற்ற என்னு மிடத்தில் மாற்றுச்சிகிச்சை ஒன்றை மேற்கொண்டார். இதுவே உதிரிப்பாக சத்திரசிகிச்சை என பின்பு பிரபல்யமானது. இச் சிகிச்சை Rejection effect (ஏற்காத விளைவு) காரணத்தினால் அதிகளவில் வெற்றி பெறவில்லை. ஆயினும் இதே போன்ற மாற்றுச் சிசிச்சை சிறுநீரகத்தில் மிகச் சிறப்பான முறை யில் நடைபெற்றது. குழந்தையொன்றைப் பெற்றெடுக்க முடியாத சில தாய்மார்கள் இருக்கிறார்கள். இதற்காக TEST TUBE BABY என்னும் முறையில் குழந்தையைப் பெற்றெடுக்கிறார்கள். வைத்திய இயலுக்கும் மனித நடவடிக்கைகளுக்கும் உள்ள தொடர்புகளை கவனிக்கும் போது மருத்து வத்துறை ஒழுக்க நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதை அறிய முடிகின்றது. ஒரு மருத்துவர் பல்வேறுபட்ட மக்களைச் சந்திக்க வேண்டி ஏற்படும். ஆண் வைத்தியர் பெண் நோயாளியையும் சந்திக்க வேண்டி ஏற்படும். இவ்வாறான சந்தர்ப்பத்தின் போது ஒழுக்கம் முக்கியமாகும். வைத்தியப் பரிசோதனைகளுக்கு மனிதர்கள் ஊடகங்களாகப் பயன்படுத்துவது ஒழுக்க விழுமியங்களை மீறுவதாக உள்ளன. அதாவது மருந்துகள் குணமாக்கும் தன்மையை அறிய மனிதர்களை பரிசோதனை மாதிரிகளாகப் பயன்படுத்த முடியாது. மனிதனில் விலங்குகள் தாவரங்களில் செய்யும் கலப்புப் பிறப்புக்களைச் செய்வது ஒழுக்க விழுமியங்களை மீறுவதாக உள்ளது. வைத்தியத் தொழில்நுட்பத்தால் ஏற்படும் குழாய் குழந்தைகள் ஒழுக்கப் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன. கருவை உருவாக்குவதற்கு ஒரு தாயைத் தேடுவதும் தாய்க்கு கருவைத் தேடுவதும் ஒழுக்கப் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றன. பிறக்கும் குழந்தைக்கான தாய்ப்பாலும், பிள்ளைக்கும் தாய்க்கும் உள்ள தொடர்பு பிள்ளையின் தகப்பன் யார் என உறுதிப்படுத்துவதும் கொள்வதும் பிரச்சினையாகும்.

விவசாயத் துறையில் இன்று பிறப்புரிமை பொறியியல் (GENETIC ENGINE ERING) மூலமாக அதிக விளைச்சல் தரக்கூடிய பயிரினங்களில் உள்ள பரம்பரை அலகுகளை இனங்கண்டு அவற்றைப் பிரித்தெடுத்து பூச்சிகள், களைகளை எதிர்த்து வாழக் கூடியவையாகவும் உயர் வெப்பநிலை, வரட்சி ஆகியவற்றைத் தாங்கி வாழக் கூடிய பயிர்களை உருவாக்க முடியும். விஞ்ஞானி என்றால் விஞ்ஞான அறிவு சாதாரணமான அறிவு. விவேகமுள்ள ஒரு மானிடனே என்று தான் கூறலாம். எனவே சாதாரணமாக நாம் அறிவது எல்லாம் விஞ்ஞானமாகும். விஞ்ஞான அறிவு என்பது இயற்கையைப் பற்றிய அறிவாகும் விஞ்ஞானத்திற்கு பல வகை வரைவிலக்கணங்கள் கூறப்படுகின்றன. ஆயினும் விஞ்ஞானம் என்பது "இயற்கைகளின் தன்மைகளை ஆராய்ந்து ஒழுங்காக விளங்க வைக்கும் பொது விதிகளைக் கொண்ட ஒரு அறிவு " எனக் கூறலாம். விஞ்ஞான உண்மைகள் வரையறுக் கப்பட்ட ஒரு முறையை உபயோகித்து கண்டு பிடிக்கப்பட்டவையல்ல.

அப்பிள்பழம் ஏன் நிலத்தில் விழுகிறது ஆனால் சந்திரன் ஏன் அப்படி விழவில்லை என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்ட . நியூட்டன் ஈர்ப்பு விதிகளை அமைத்தார். பாஸ்ரா என்னும் பிரான்சிய விஞ்ஞானி திரவங்கள் தொதித்தலுக்குக் காரணம் அமுக்கம் எனக் கண்டறிந்தார். ஆக்கிமிடின் என்பவர் தனக்குக் கொடுக்கப்பட்ட மகுடம் பொன்கலப்புடையதா ? என்னும் பிரச்சனையை ஆராய்ந்து மிதப்பு விதியை அறிமுகம் செய்தார்.

காரண விளைவு முறை ஒரு விஞ்ஞான முறையேயாகும். நாம் காணும் எல்ல விளைவுகளும் வரையறுக்கப்பட்ட ஏதோ சில காரணங்களினாலேயே நடைபெறுகின்றன. நாம் எம்மையறியாத முறையில் இவற்றைப் பயன்படுத்துகிறோம். இயற்கை விஞ்ஞான முறைகளை வரையறுத்துள்ளது. பகல், இரவு மாறி மாறி வருதல் சூரிய, சந்திர பிரயாணமேயாகும். இயற்கை நியதியை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். நம் வீட்டில் விசிறி தினமும் சுழன்று ஒரு நாள் சுழலாது இருந்தால் நாங்கள் விசிறி சுழலுவ தற்குக் காரணமாக இருந்த மின்னோட்டத்தில் உள்ள பிழைகளை ஆராய் முற்படுவோமேயன்றி இயற்கை மாறுபட்டு விட்டது என்று ஒரு போதும் எண்ணமாட்டோம். இதற்குக் காரணம் இயற்கை நிகழ்ச்சிகள் மாறுபாதவை என்பதில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கை ஆகும்.

மாணவர் பயிலும் கல்வி அவர்கள் தமது வாழ்வில் ஒரு தொழிலை நடாத்தி ஊதியம் பெற வாய்ப்பு அளிக்க வேண்டும். விஞ்ஞான முன்னேற்றம் காரணமாக பென்னம் பெரிய தொழிற்சாலைகளும், இயந்திரசாலைகளும் அமைக்கப்படுகின்றன. அவற்றில் வேலை செய்வதற்கும், இயந்திரக் கருவிகளை உபயோகிப்பதற்கும் தேர்ச்சியுள்ள வேலையாட்கள் தேவை . மேலும் தொழில் முறையியல், பிரயோக விஞ்ஞானம் ஆராய்ச்சி, மருத்துவம் முதலிய பல துறைகளில் மிகத் தேர்ச்சியுள்ள விஞ்ஞானிகள் சேவை அதிகரித்து வருகின்றன. நாம் விஞ்ஞானத்தை பாடசாலையில் பாடவிதானத்தின் மூலமாகவே அறிகிறோம் என்பதில் சந்தேகமில்லை. நமது வாழ்வில் நாம் விஞ்ஞானக் கருவிகள், வண்டிகள், இயந்திர மின்சாரம் ஆகியவற்றை தினமும் உபயோகித்துக் கொண்டிருக்கின்றோம். விஞ்ஞானக் கல்வி கற்றிருந்தால் இவற்றை உபயோகிப்பது மிகச் சுலபமாக இருக்கும். மின்சாரம் தடைப்பட்டால் நாமே திருத்திக் கொள்ளலாம். சுகாதார, விஞ்ஞான விதிகளைச் சரியாக நாம் கடைப்பிடித்தால் நாம் நோயின்றி வாழலாம்.

## வாரம் ஒரு ஆசனம் (03)

### நின்று செய்யும் ஆசனங்கள்

**02. பாதஹஸ்தாசனம்**

பாத என்றால் பாதம், ஹஸ்த என்றால் கை என்ற பொருள் கொண்டால் இதன் உச்ச நிலையில் முன்புறமாக உடலை வளைத்து கைகளை பாதங்களுக்குக் கீழ் வைக்கப்படுதலை குறிக்கும்.

**செய்முறை:**

1. உடல் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு (தடாசனத்தில்) நிற்கவும். (ஆரம்ப நிலை)

2. மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள் மட்டத்திற்கு மேல் உயர்த்தவும். உள்ளங்கைகள் தரையை நோக்கியதாக இருக்க வேண்டும். பின்னர் கைகள் இரண்டையும் தலைக்கு மேல் உயர்த்தி புஜங்களை இரு காதுகளுடன் சேர்த்தவாறு வைக்கவும்.

3. மூச்சை வெளிவிட்டவாறு உடம்பை கிடை மட்டமாக தரைக்கு இணையாக முன்னோக்கி வளைக்கவும். மேலும் மூச்சை வெளிவிட்டவண்ணம் உடம்பை கீழ் நோக்கி வளைத்து கைவிரல்களை பாதங்களுக்கு கீழ் வைக்கவும். தலையானது இரு கைகளுக்கு இடையில் தளர்வாக இருக்க வேண்டும். இந்த நிலையில் சாதாரண சுவாசம் கொள்க.

4. இதன் உச்ச நிலையாக நெற்றியானது முழங்கால்களைத்தொட்டிருக்க, உள்ளங்கைகளைபாதங்களுக்கு கீழே வைக்கவும். இந்த நிலையில் சாதாரணமாக சுவாசித்த வண்ணம் இருக்கவும். (இந்நிலையில் கைகளை மடிக்கலாம். கால்களை மடிக்கலாகாது.)

5. பின்னர்மூச்சைஉள்ளிழுத்துக்கொண்டுதலையைக் கைகளோடு சேர்த்தவாறு முதுகெலும்பின் அடிப்பகுதியிலிருந்து தரைக்கு இணையாக உயர்த்தி தொடர்ந்து மூச்சை உள்ளிழுத்தவாறு நிமிர்ந்து நேரான நிலைக்கு வரவும்.

6. மூச்சை வெளிவிட்டுக் கொண்டு இரு கைகளையும் பக்கவாட்டில் தோள்களுக்கு இணையாக இறக்கி பினனர் ஆரம்ப நிலைக்கு கொண்டுவரவும்.

**பயன்கள்:**



உடம்பின் பின்புறம் உள்ள எல்லா தசைகள், தசை நார்கள், இடுப்பெலும்புகள், மூட்டுகள், தொடை எலும்பு, கால்நரம்புகள்நன்றாகநீட்டப்படுகின்றன. முதுகுத்தண்டுவடம், இடுப்பு எலும்புகள் இறுக்கத்தன்மை குறைந்து முறுக்கேறும். தலைப்பகுதிக்கு குருதி ஓட்டம் அதிகரிக்கும். ஜீரண உறுப்புக்கள் மற்றும் நாளமில்லாச் சுரப்பிகள் நன்கு வேலை செய்கின்றன. இடுப்பு பகுதியில் அதிகமாகக் காணப்படும் ஊளைச்சதைகள் மற்றும் தேவையற்றகொழுப்புக்கள் குறைவடைகின்றன. இரப்பை, பித்தப்பை கல்லீரல், மண்ணீரல் ஆகியனவற்றின் இயக்கம் அதிகரித்து ஜீரண சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. கல்லீரல்அழற்சி, மலச்சிக்கல், நீரிழிவுமுதலிய கோளாறுகள் நீங்கும். மூட்டு வலி, நாரி வலி, கழுத்து வலி நீங்கும். பெண்களுக்கான கர்ப்பப்பை மற்றும் சூலகம், சூலக குழாய்களது இயக்கத்தை மேம்படுத்துகிறது. பியூட்டறி தைறொயிட்மற்றும்பராதைறொயிட்சுரப்பிகளின்செயற்றிறனை அதிகரிக்கச்செய்து அவைசார்ந்த நோய்களை இல்லாமற்செய்கிறது. தொடரும்....

ஸ்ரீ. நதிபரன் (யோகா போதனாசிரியர்)

# இரசாயன உரம், கிருமி நாசினியால் பயிர்ச்செய்கை நிலம் நஞ்சாகும் அபாயம்!

**கிளிநொச்சி, ஒக்.26**

**கிளிநொச்சியில் ஒரு வருடத்தில் 18 மில்லியன் கிலோ கிராம் இரசாயன உரமும், 45 ஆயிரம் லீற்றர் கிருமி நாசினியும் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் கிளிநொச்சியில் நிலம் நஞ்சாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டடப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்புட்டுள்ளதாவது;

கிளிநொச்சி மாவட்டத்தில் வருடம் தோறும் 90 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. காலபோகத்தில் 70 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும், சிறுபோகத்தில் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன்போது ஒரு ஏக்கர் நெற்பயிர்ச்செய்கைக்கு உரம், வீ1, யூரியா, ரிஎஸ்பி, ரிடீஎம், போன்ற இரசாயன உர வகைகள் சுமார் 200 கிலோ கிராம் பயன்படுத்தப்படல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் இது 225 கிலோ கிராம் அல்லது 175 கிலோகிராம் எனக் கூடிக் குறையும். சராசரியாக ஒரு ஏக்கர் நெற் பயிர்ச்செய்கைக்கு 200 கிலோ கிராம் இரசாயன உரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே கிளிநொச்சியில் சுமார் 90 ஆயிரம் ஏக்கர் நெற் பயிர்ச்செய்கை நிலத்தில் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ கிராம் படி இரசாயன உர வகைகள் பயன்படுத்தப்படுகின்றபோது மொத்தமாக வருடந்தோறும் கிளிநொச்சியின் நிலங்களில் 18 மில்லியன் கிலோ கிராம் அதாவது ஒரு கோடியே 80 இலட்சம் கிலோ இரசாயன உரம் பயன்படுத்தப்படுகிறது.

அவ்வாறே ஒரு ஏக்கர் நெற் பயிர்ச்செய்கைக்கு சுமார் 500 மில்லிலீற்றர் கிருமி நாசினி தேவைப்படுகிறது. அதன்படி மொத்தமாக வருடந்தோறும் 90 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கைக்கு 45 ஆயிரம் லீற்றர் கிருமிநாசினியும் பயன்படுத்தப்படுகிறது.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தின் நெற்பயிர்ச் செய்கைக்கு மாத்திரம் வருடந்தோறும் ஒரு கோடியே 80 இலட்சம் கிலோ கிராம் இரசாயன உரமும், 45 ஆயிரம் லீற்றர் கிருமி நாசினியும் பயன்படுத்தப்படுவது ஆரோக்கியமற்ற சூழலாகவே கருதுப்படுகிறது.

வருடந்தோறும் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றபோது நிலம் நஞ்சாக மாறிவிடும். இதனால் மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஐ-214)



போக்குவரத்து அதிகமுள்ள கிளிநொச்சி டிப்போ வீதியில் உள்ள கழிவு வாய்க்காலின் மேற்பகுதி உடைந்த நிலையில் நீண்ட காலமாகக் காணப்படுகிறது. இதனை உரியவர்கள் உடனடியாகச் சீரமைத்துத் தருமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-214)



## சேதமடைந்த பாலத்தை சீரமைக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஒக். 26

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாண்டியன் குளம் கிராமத்தின் பிரதான வீதியிலுள்ள பிள்ளையார் கோவிலடி பாலம் இரண்டு வருடங்களுக்கும் மேலாக சேதமடைந்த நிலையில், கவனிப்பாரற்றுள்ளது. இதனூடாகப் பயணம் செய்யும் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே இதை விரைவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

உடைவுடன் இருக்கும் இந்தப் பாலத்தில் அண்மையில் எருமை மாடு ஒன்று சிக்கி உயிரிழந்திருந்தது. இதனூடாகப் பயணம் மேற்கொள்வோரும் உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றனர். எனவே விரைவில் சீரமைக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (கு-ரி1)

## மரணபீதியில் கஞ்சிப்பானா!


கொழும்பு, ஒக்.26

"எனது உயிரைக் காக்குமாறு இறைவனிடம் வேண்டுங்கள்." என்று விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிழல் உலகத் தாதா கஞ்சிப்பான இம்ரான், சிறைச்சாலைக்குச் செல்லும் தனது உறவினர்களிடம் சிறு குழந்தையைப் போல அழுது, மன்றாடுகின்றார் என்று தகவல் வெளியாகியுள்ளது.



புலனாய்வுத் தகவல்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

நிழல் உலகத் தாதாவும், போதைப்பொருள் கடத்தல்காரருமான மாகந்துரே மதூஷ் மாளிகாவத்தை பகுதியில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து, அவரின் சகாவான கஞ்சிப்பான இம்ரான் பெரும் பீதியில் இருக்கிறார் எனவும், ஏனைய சிறைச்சாலைகளில் உள்ள பாதாளக் குழு உறுப்பினர்களும் இதேபோன்றதொரு மனநிலையிலேயே உள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-44)



## மாட்டுவண்டிச் சவாரி

மன்னார், ஒக். 26

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான இரட்டை மாட்டு வண்டி சவாரிப் போட்டி மன்னார் முருங்கன் பிச்சைகுளம் இரட்டை மாட்டு வண்டிச் சவாரித் திடலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில் ஏ.கே.ஆர். நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் நடைபெற்ற இந்தப் போட்டியில், வடக்கிலுள்ள 5 மாவட்டங்களையும் உள்ளடக்கிய 64 சோடி காளைகள் பங்குபற்றின.

ஏ.பி.சி.டி மற்றும் ஈ ஆகிய 5 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

ஏ.பி. ஆகிய இரு பிரிவுகளிலும் மன்னார் மாவட்ட காளைகளும், சி பிரிவில் கிளிநொச்சி காளைகளும், டி,ஈ. பிரிவுகளில் யாழ்ப்பாணக் காளைகளும் வெற்றி பெற்றன.

வெற்றிபெற்ற காளைகளுக்கும் உரிமையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.

(து-56)

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

வடமராட்சி, ஒக். 26

நெல்லியடி கிழக்கு புதுத்தோட்டம் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தின் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.48 தொடக்கம் 11.12 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

கோவிலுக்கு வருகைதரும் அடியவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முகக் கவசம் அணிந்து வருமாறும் தேர்த் திருவிழா உபயகாரர்கள் கேட்டுள்ளனர். (து-422)

## நில அபகரிப்புக்கு எதிராக கண்டனத் தீர்மானங்கள்

*சபைகள் நிறைவேற்றவேண்டும் என்கிறார் பிரதேச சபை உறுப்பினர்*

யாழ்ப்பாணம், ஒக். 26

**அபகரிக்கப்படும் தமிழர் நிலங்களைக் காப்பாற்ற அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன் கோரியுள்ளார்.**

தற்போது தமிழர் பூர்வீக நிலங்கள் வடக்கு-கிழக்கு தழுவிய ரீதியில் என்றுமிலாதவாவாறு துரித கதியில் தொல்லியல் திணைக்களம் மற்றும் வனவள திணைக்களங்கள் ஊடாக சூட்சுமமாக சூறையாடப்படுகின்றன. அதை எதிர்க்கவும் தடுக்கவும் வழிவகை செய்யும் பொருட்டு தமிழர் தாயக பிரதேசங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அரசின் கவனத்தைத் திருப்ப ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். எனவே அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இதற்கான கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற தவிசாளர்கள், மற்றும் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். என்று கோரியுள்ளார்.

(கு)



மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகி அம்மன் கோவில் நவராத்திரி உற்சவத்தின் மகிஷா சூரன்போர் கோவில் இரண்டாம் வீதியில் சுகாதார நடைமுறைகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்றது. (த-131)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை வாணி விழா நடைபெற்றது. நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். (த-159)

கடலரிப்புக்குள்ளாகி பாதிக்கப்படும்

# அல்லிராணிக் கோட்டையின் சுற்றுப்புறத்தைச் சீரமையுங்கள்

**மன்னார், ஒக். 26**

**மன்னார் அல்லிராணிக் கோட்டையைச் சுற்றியுள்ள பகுதிகள் கடலரிப்பால் பாதிக்கப்பட்டு கடுமையாகச் சேதமடைகின்றன. அங்கு தடுப்பணைகள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.**



மன்னார் அரிப்புத்துறையில் உள்ள அல்லிராணி கோட்டை மிகவும் பழமை வாய்ந்த தமிழர்களின் வரலாற்றுச் சின்னம். இதனைச் சுற்றியுள்ள பகுதிகள் கடலரிப்புக்கு உட்பட்டு வருகின்றன. உடனடியாக தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிட்டால் அல்லிராணிக் கோட்டை மட்டுமல்ல குடிமனைகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். எனவே மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த மக்கள் பிரதிநிதிகளும் கடற்றொழில் அமைச்சரும் இதைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

சில வருடங்களுக்கு முன் கடலரிப்பினால் கோட்டைப் பகுதி பாதிக்கப்படுகின்றது என்ற மக்களின் முறைப்பாடுகளையடுத்து கோட்டையின் முன்பாக 75 மீற்றருக்கு பாறைக்கற்கள் அடுக்கப்பட்டமையால், கோட்டையை அண்மித்த பகுதிகள் கடலரிப்பிலிருந்து தற்காலிகமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆனால் பாறைகள் போடப்பட்ட பகுதியில் இருந்து இரண்டு பக்கமும் கடலரிப்பின் மூலம் குடைந்து செல்கிறது. கடலரிப்பு ஏற்பட்ட பகுதியிலிருந்து கிட்டத்தட்ட 50 மீற்றர் தூரத்திலேயே பிரதான வீதி உள்ளது. கரையை அண்மித்த பகுதிகள் அனைத்துக்கும் பாறைக்கட்டுகள் இட்டு தடுப்பணைகள் செய்யாவிட்டால் கோட்டை மற்றும் அதனை அண்மித்த கிராமங்களும் பாதிப்படையும் என்று மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்தப் பிரச்சினையால் அல்லிராணிக் கோட்டைக்கு பக்கத்துக் கிராமமான கொக்குப்படையான் கிராமம் கடலரிப்பால் பாதிக்கப்படுகின்றது என்றும் அந்தப்பகுதி மீனவர்கள் கடந்த மாதம் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-213)

# கால்நடைகளை அவிழ்த்து விட்டால் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை

வடமராட்சி, ஒக். 26

வயல் நிலங்களை மேயும் கால்நடைகளின் உரிமையாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று கரவெட்டி கமநல அபிவிருத்தி பெரும்போக உத்தியோகத்தர் செ.திலீப் குமார் அறிவித்துள்ளார்.

கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கை ஒரு வாரமாக இடம்பெறுகின்றது.

யார்க்கரு பகுதிகளில் தொடர்ச்சியாக நெற்பயிர்கள் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகளால் உணவாக்கப்பட்டும் நாசமாக்கப்பட்டும் வருகின்றன என்று அங்குள்ள கிராம அமைப்புக்கள் குற்றம் சுமத்தி வருகின்றன. அதனால் அந்தப் பகுதிகள் கரவெட்டி பிரதேச செயலக அலுவலர்கள், கமநல அலுவலர்கள், கிராம அலுவலகர், நெற்பயிர்ச்செய்கை விவசாயிகள் மற்றும் அதிரடிப் படையினர் எனப் பலராலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. கட்டாக்காலி மாடுகள் தவிர்ந்த பட்டி மாடுகள் வைத்திருக்கும் உரிமையாளர்கள் தமது மாடுகளைக் கட்டுப்படுத்தி வைக்கவேண்டும். இல்லையேல் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-422)

# எம்மைத் திட்டித் தீர்த்தவர்கள் தற்போது எங்களுடன் இணைவு

*மஸ்தான் எம்.பி. எகத்தாளம்*

தலைமன்னார், ஒக். 26

எந்தச் சிறுபான்மைச் சமூகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதியையும் எங்கள் கட்சியையும் மிகக் கேவலமாகவும் தரக்குறைவாகவும் திட்டித் தீர்த்தார்களோ, அவர்கள் தற்போது எங்கள் வழியேசரியென்றுநாடாளுமன்றில் நடைபெற்ற வாக்களிப்பில் எமக்கு எடுத்துக்காட்டியுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக 43 பேருக்கு நியமனக் கடிதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. அதில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்தகாலங்களில்ஒரு சாரதியாக அரசவேலைகளுக்குச் செல்வதென்றால்குறைந்ததுகல்விப் பொது தராதரப் பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இப்பொழுது இந்த நாட்டிலுள்ள வறுமையை நீக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. படிக்காத சமூகத்தை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும் என்ற எண்ணமும் இதில் ஒன்றாக இருக்கின்றது.

இவர்கள்தீயசெயல்பாடுகளுக்குள் இறங்கிவிடக் கூடாது என்பதற்கான ஒருமுயற்சியாகவும்இது அமைகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-60)

# நெடுங்கேணி ஊடாக பயணம் செய்தவர்களுக்கு பி. சி. ஆர்

யாழ்ப்பாணம், ஒக்.26

நெடுங்கேணி ஊடாக சேவையில் ஈடுபடுபட்ட பஸ் சாரதி மற்றும் நடத்துநர்கள் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று வவுனியா வடக்குக்குப் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

வவுனியா, நெடுங்கேணியில் வீதித் திருத்தப் பணிகளில் ஈடுபட்ட 12 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் சிலர் கடந்த 12, 13 மற்றும் 14ஆம் திகதிகளில் நெடுக்கேணி ஊடாக முல்லைத்தீவு செல்லும் பஸ்களில் பயணித்துள்ளனர்.

அந்தத் திகதிகளில் அதிகாலை 5 மணி முதல் முற்பகல் 10 மணிவரையான நேரத்துக்குள் நெடுங்கேணி ஊடாக முல்லைத்தீவு சென்ற பஸ்களின் சாரதி, நடத்துநர்கள் பி.சி.ஆர். பரிசோதனை செய்ய வேண்டும் என்று பொது சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார். அவர்கள் தங்களைச் சுயதனிமைப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திகதிகளில் குறித்த நேர காலப் பகுதியில் அந்த பஸ்களில் பயணம் செய்த பயணிகளும் தங்கள் பகுதி சுகாதாரப் பரிசோதகர்களைத் தொடர்புகொண்டு தங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரீ3)

## கருத்தமர்வு

கர்ப்பகாலத்தில் ஏற்படும் குருதி அமுக்கம் மற்றும் கர்ப்ப கால நீரிழிவு உள்ளிட்ட நோய்கள் தொடர்பான கருத்தமர்வு வரணி இயற்றாலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

கலைவாணி தாய்மார் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கருத்தமர்வில் கர்ப்ப காலத்தில் மேற்கொள்ள வேண்டிய உணவுப் பழக்க வழக்கங்கள், உடல் தொழிற்பாடு, பரம்பரை காரணங்கள் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு போன்றவை தொடர்பாக சுகாதார மருத்துவ அதிகாரி விளக்கமளித்தார். (ஐ-9)

# திணைக்கள நடைமுறையை மீறிச் செயற்படவே முடியாது

## தீயணைப்பு சேவை தொடர்பில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக். 26

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு சேவைகள் வழமைபோன்று செயற்படுகின்றன. அந்த சேவையை இடைநிறுத்த முடியாது. திணைக்கள நடைமுறையை மீறியும் செயற்பட முடியாது என்று கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந. பிரபாகரன் தெரிவித்துள்ளார்.**

"தீயணைப்பு சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. தற்காலிக பணியாளர்களை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணியில் ஈடுபட அனுமதி மறுத்த காரணத்தால் இந்தச் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன" என்று கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் ஊடகங்களுக்கு தகவல் வெளியிட்டிருந்தார். இது தொடர்பில் உள்ளூராட்சி உதவி ஆணையாளரைத் தொடர்புகொண்டு வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீயணைப்பு சேவை அத்தியாவசியமானது. அது உள்ளூராட்சி சபைக் கட்டுப்பாட்டில் உள்ள விடயம். திணைக்கள நடைமுறைகள் சட்டதிட்டங்களுக்கு மாறாக, ஒரு பணியாளருக்கு 140 மணித்தியாலங்கள் மேலதிக நேரக் கடமைக் கொடுப்பனவுக்கு அனுமதிக்குமாறு கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் கோரியிருந்தார். அதற்கு அனுமதி வழங்க முடியாது. எனது வரையறைக்கு உட்பட்டு 40 மணித்தியாலங்களே மேலதிக நேரக் கொடுப்பனவுக்கே அனுமதி வழங்க முடியும். அதற்கு மேற்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுக்கு உரியதிணைக்கள நடைமுறைகளுக்கு அமைவாக பிரதம செயலரின் அனுமதியே பெற வேண்டும்.

தற்போது தீயணைப்பு பிரிவில் உள்ள அனைத்து பணியாளர்களும் கரைச்சி பிரதேச சபையின் நிரந்தர பணியாளர்கள். அவர்கள் வேறு பணிகளிலிருந்து தீயணைப்பு பிரிவுக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு-214)

# வேலைவாய்ப்பு வழங்கலில் வெலிஓயாவுக்கு முதலிடம்!

முல்லைத்தீவு, ஒக்.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்நோக்கு அபிவிருத்திச் செயலணி செயலகத்தின் கீழ் 54 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவர்களில் 18 பேர் வெலிஓயாவைச் சேர்ந்தவர்கள்.

ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 54 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவில் நடைபெற்றது.

அவர்களில் 18 பேர் வெலிஓயாவையும் 11 பேர் கரைதுறைப்பற்றையும், 9 பேர் புதுக்குடியிருப்பையும், 6 பேர் துணுக்காயையும், 5 பேர் மாந்தை கிழக்கையும், 5 பேர் ஒட்டுசுட்டானையும் சேர்ந்தவர்கள்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் இந்த நியமனக் கடிதங்களைக் கையளித்தார். நியமனத்தின்போது வழங்கப்பட்டுள்ள கடிதங்கள் தனிச் சிங்கள மொழியில் உள்ளன என்றும், அதில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரியவில்லை என்றும் நியமனம் பெற்ற, தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். (எ-19)

# ஒரு மில். விதைகளை நடும் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.26

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு மில்லியன் பயன்தரு விதைகளை நடும் கற்புகா திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்றது.

முதற்கட்டமாக 10 ஆயிரம் பனை விதைகள் நடும் திட்டத்தை கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தொடக்கிவைத்தார்.

இரணைமடு வான்பகுதியின் பாதுகாப்பு மண் அணையின் இரு புறமாக ஆறு கிலோ மீற்றர் தொலைவுக்கு சுமார் 12 கிலோ மீற்றருக்கு பனை விதைகள் நடப்படுகின்றன.

கிளிநொச்சி சமூக அபிவிருத்தி பேரவையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் அமைப்பு, கிளிநொச்சி வட்டக்கச்சி இராமநாதபுரம் சர்வதேச ஒன்றியம் ஆகியவற்றின் அனுசரணையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. (எ-214)

# நியமனக்கடிதம் வழங்கலில் சுகாதார நடைமுறை மீறல்!

பொதுமக்கள் விசனம்

நாட்டில் கொரோனாத் தொற்று தீவிரம் அடைந்துள்ள நிலையில், மட்டக்களப்பு நகரில் நேற்று பெரும் எண்ணிக்கையான இளைஞர், யுவதிகள் ஒன்றுகூடியிருந்தமை தொடர்பாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒரு லட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நேற்று இளைஞர் யுவதிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு மட்டக்களப்பு நகரில் உள்ள தேவநாயகம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மண்டப நுழைவாயில் நேற்றுக் காலை திறக்கப்படாதிருந்ததால் நியமனக் கடிதம் பெற வந்த இளைஞர், யுவதிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் ஆகியோர் வீதியில் குழுமியிருந்தனர்.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், நூற்றுக்கணக்கானோர் சுகாதார நடைமுறைகளை மீறி ஒன்றுகூடியமை தொடர்பில் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இறுதியில் இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பிட்ட தொகையினராக கட்டம் கட்டமாக அனுமதிக்கப்பட்டனர். ஏனையோர் வீதிகளில் கடும் வெயிலுக்கு மத்தியில் காத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ)



நெல்லியடி சன சமூக நிலைய

# புதிய கட்டடம் திறப்பு

வடமராட்சி, ஒக். 26

நெல்லியடி சன சமூக நிலையத்தின் புதிய கட்டடத் தொகுதிகளுக்கான திறப்பு நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் பரிபாலசபை கட்டடத்தை நெல்லியடி தடங்கன் புளியடி பரிபால சபை தலைவர் பொ.கதிரமலை, வாசிகசாலை கட்டடத்தை சமூகச் சுடர் நடேச பாஸ்கரன், பொது நோக்கு அறையை தடங்கன் புளியடி பரிபாலன சபை உப தலைவர் சி.குமாரசூரியர் மற்றும் கேட்போர் கூடத்தை புடவை மாளிகை ஒன்றின் உரிமையாளர் சு.சண்முகசுந்தரம் ஆகியோர் திறந்து வைத்தனர். (கு-422)

# திருமலை சந்தைக்கு பூட்டு

கொழும்பு, ஒக்.26

திருகோணமலை நகரிலுள்ள மத்திய சந்தைக் கட்டடத் தொகுதி நேற்று மூடப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் பரவலாக கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, பொலிஸாரின் பாதுகாப்புடன் சந்தையில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கைகள் திருகோணமலை நகரசபை தீயணைப்புப் படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)



நவராத்திரி விரதத்தின் இறுதி நாளான நேற்று வவுனியா மாவட்டத்திலுள்ள கோவில்களில் ஏடு தொடக்குதல் சிறப்பாக நடைபெற்றது. வவுனியா வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் கோவிலிலும் இது சிறப்பாக நடைபெற்றது. (கு-18)

# குருகுலத்தின் நிறுவுநருக்கு 33ஆம் ஆண்டு நினைவேந்தல்

கிளிநொச்சி, ஒக். 26

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தின் செல் வீச்சில் படுகொலை செய்யப்பட்ட, 'குருகுலம்' நிறுவுநரான கதிரவேலுப்பிள்ளை கதிரவேலுவின் 33ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி ஜெயந்திநகர் கிராமத்தில் அஞ்சலி நடைபெற்றது.

1964 ஆம் ஆண்டு குருகுலம் ஆரம்பிக்கப்பட்டது.

தாய், தந்தையர் இல்லாத, வறுமை நிலையிலுள்ள பிள்ளைகள் இந்தப் பூமியில் சளைத்தவர்கள் அல்ல என்ற மனநிலையோடு வாழ்வதற்கேற்ப வளர்த்தெடுக்கும் நோக்கில் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (கு-222)

# ஆதனப்பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 04, வேதவனப்பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள ஆதன இலக்கம் 10/7 எனும் வரி மதிப்பு இலக்கத்தை உடைய ஆதனம் வேலுப்பிள்ளை கனகசபை எனும் பெயரில் பிரதான ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ் ஆதனம் பிரசித்தநொத்தாரிசு என். தில்லைவிநாயகம் முகதாவில் 07/06/1992 ஆம் திகதியிடப்பட்ட 4893 இலக்கத்தில் நிறைவேறிய உறுதிமூலம் பொன்னம்பலம் அமுதலிங்கம். பொன்னம்பலம் சிவலிங்கம். சிவகுரு சண்முகசுந்தரம். சிவகுரு ஜெயபாலரத்தினம். சிவகுரு சிவயோகநாதன். சிவகுரு செல்வரஞ்சினி ஆகியோருக்கு பிரிவிடல் உறுதிமூலம் அளிக்கப் பட்டுள்ளது. அவ் உறுதி பிரசித்தநொத்தாரிசினால் காணிப்பதிவகத்தில் பதியப்படவில்லை .

பின்னர் சாவகச்சேரி வடக்கு கல்வயல் பொன்னம்பலம் அமிர்தலிங்கம். பொன்னம்பலம் சிவலிங்கம் சிவகுரு சண்முகசுந்தரம். சிவகுரு ஜெயபாலரத்தினம். சிவகுரு சிவயோகநாதன். சிவகுரு செல்வரஞ்சினி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சு.கந்தசாமி முகதாவில் 24.09.1992ஆம் திகதியிடப்பட்ட 19052இலக்கத்தில் நிறைவேறிய அறுதி மூலம் சிறிகண நாதனுக்கும் பெண் செல்லம்மாவுக்கும் அறுதி மூலம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வறுதி காணிப் பதிவகத்தில் F672/178இல் பதியப்பட்டுள்ளது. அதற்கான ஆதன தோம் பறிக்கை விண்ணப்ப தாரியிடம் உள்ளது.

பின்னர் சிறிகணநாதனும் செல்லம்மாவும் எவருக்கும் உறுதி எழுதாமல் 2016ஆம் ஆண்டு செல்லம்மாவும் 2017ஆம் ஆண்டு சிறிகணநாதனும் இறந்துவிட்டனர். இவர்களுக்கு இரு பிள்ளைகள்தான் என்றும் அவர்கள் இருவரும் பெண் பிள்ளைகள் (நளினி சுரேஸ்குமார் . யசிக்கா பிரதீபன்) என்று சத்தியக்கூற்று விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவர்களில் மூத்த பிள்ளையான யசிக்கா பிரதீபனால் பிரசித்த நொத்தாரிசு சி.சிவபால சுப்பிரமணியம் முகதாவில் 10.06.2017ஆம் திகதியிடப்பட்ட 600ஆம் இலக்கத்தில் நிறை வேறிய சீதன உறுதி மூலம் சகோதரியான சுரேஸ்குமார் நளினிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆதன விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் J/305 கிராம அலுவலர் பகுதி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சாவகச்சேரி கோவிற் பற்று சாவகச்சேரி இறை செங்கமலையான் வளவு. இவ் ஆதனம் 29.07.2011 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர் வி. சிவராசாவினால் அளந்து விஸ்தரிக்கப்பட்ட 3230 ஆம் இலக்க வரை படத்தின் படியும் ஆட்சிப்படியும் நிலப்பரப்பு 04 இற்கும் எல்லைகள்.

**கிழக்கு :- இராமுப்பிள்ளை முருகையனுக்கும் சகோதரர்களுக்குரிய ஆதனங்கள்.**
**வடக்கு :- ஒழுங்கை.**
**மேற்கு :- கதிர்காமு குமாரசாமிக்குரிய ஆதனம்.**
**தெற்கு :- தங்கராசா சிறிகணநாதனுக்கும் பெண் செல்லம்மாவிற்கும் உரிய ஆதனங்கள்.**

தற்போது சுரேஸ்குமார் பெண் நளினி இவ்வாதனத்தை தனது பெயருக்கு நகரசபை பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனைகள் தெரிவிப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரி விக்கமுடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்கள் இங்குள்ள உறவினர்கள் ஊடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனைகள் எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமை யாளர்களது பெயரிற்கு பதிலாக விண்ணப்பதரியின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக் கப்படும். இவ் உட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எந்தவித பிரச்சினைகளுக்கும் சாவகச்சேரி நகராட்சிமன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சிவமங்கை இராமநாதன்**
**தவிசாளர்,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.**

## குடியியில் நடவடிக்கை சட்டக் கோவையின் பிரிவு 16இன் கீழான அறிவித்தல் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

1. சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் - தலைவர்
2. கருணானந்தசாமி ஞானச்சந்திரன் - செயலாளர்
3. சிவஞானவேல் மதுசூதனன் - பொருளாளர்
4. வில்வக்கோன் விஜயகுமார் - உபதலைவர்
5. பொன்னுத்துரை சதாசிவம்
6. சிவநேசன் பார்த்தசாரதி
7. சிவானந்தன் நிஷாந்தன்
8. உதயகுமார் கபாஸ்கர்
9. இராமச்சந்திரன் மயூரன்
10. அனுஷா தர்மராஜ்

யாவரும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் வல்வெட்டித்துறை.

**- வழக்காளிகள்**

**வழ.இல- காணி/19713** எதிர்

1. செல்லன் ஆனந்தராசா - தலைவர்
2. சின்னவி ஆறுமுகம் - செயலாளர்
3. சுந்தரலிங்கம் மயூரன் - பொருளாளர்
4. கிட்டிணன் கண்ணன் - உபதலைவர்
5. சிவகுருநாதன் செல்வானந்தராசா - உபசெயலாளர்
6. தங்கவேல் ஜெகதாஸ்
7. மனோகரன் தினேஸ்
8. கிட்டிணன் ரவி
9. சந்திரசேகரம் மதுசாந்
10. மனோகரன் டினேஸ்

யாவரும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் இளங்கதிர்
விளையாட்டுக்கழகம் மானாங்கனை வல்வெட்டித்துறை.

**- எதிராளிகள்**

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட வழக்காளிகளினால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் காணி /19713/2020 என்ற இலக்க வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ள எதிராளிகளுக்கு எதிராக அவ்வழக்கின் பிராதில் கோரியுள்ள நிவாரணங்களினைக் கோரி கோப்பிடப்பட்டுள்ளது. அவ் வழக்கில் குடியியில் நடவடிக்கை கோவையின் பிரிவு 16இன் கீழான பகிரங்க அறிவித்தலினை பத்திரிகையில் பிரசுரம் செய்யுமாறு கௌரவ மன்று பிறப்பித்த கட்டளைக்கு இணங்க இவ்வழக்கில் அக்கறையுடைய இளங்கதிர் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் எவரேனும் தமது உரிமையை நிலைநாட்டுவதற்கு ஏதுவாக இவ் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

இவ்வழக்கின் அடுத்த தவணையாக 04.11.2020 ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது.
2020 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 16ஆம் திகதி

**நீதிமன்றின் கட்டளைப்படி**

**வரைபு**
**வழக்காளிகளின் சட்டத்தரணி**
**தங்கராஜா தனுஷன்**

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்**
**பருத்தித்துறை.**


## நாஹா மருத்துவ நிலையம்

கை. கால் எலும்பு பாதிப்பு. மூட்டுக்கள் தேய்வு. முழங்கால் தேய்வு. மாறாதபுண்கள். அல்சர். மர்மகட்டிகள். பாரிசவாதம். ஆஸ்மா பித்தப்பையில் - கல். குழந்தையின்மை உடனடித்தீர்வு

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி
(ஜெகபதிவீடு), மானிப்பாய்.
077 321 2740

## வகுப்புக்கள்

தரம் 6 முதல் O/L வரை
**தமிழ், வரலாறு** வீட்டில் வந்து கற்பிக்கப்படும்
076 202 5823


# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## தவராசா தவராணி

அன்னை மடியில்
24.01.1958

ஆண்டவன் அடியில்
25.10.2012

அன்புள்ளம் கொண்டவரே ...!
ஆண்டுகள் உருண்டோடுதம்மா
அகிலமதை நீர் பிரிந்து ஆனபோதும்
இன்னமும் ஏங்குகின்றோம் -
உம் இன் முகம் தனைக்காண ...!
உலகமதில் புதிதாய் பல உறவுகள் உருவாகின்றபோதிலும்
எம் எண்ணங்களிலிருந்து நீங்கள் எப்பொழுதும்
அகன்றதில்லையம்மா .....!
ஐங்கரனின் அடிதனிலே - நீர் ஐக்கியம் கொண்டிருப்பீர்
எங்கள் ஒவ்வொருவர் நெஞ்சங்களிலும் ஒளியாக அமர்ந்திருப்பீர்...!
கள்ளமில்லா உன் அன்புதனை- இனி காண்பது எப்பொழுதோ ...?!
கிறுக்குகளாய் அலைகின்றோம் அம்மா கீர்த்தி நீர் அளிக்க வேண்டும் ... !
குடும்பத்தின் ஆணி வேராய் - எம் குலவிளக்காய் விளங்கினீரம்மா...!
கெஞ்சிட வைத்திடாமல் - நாம் கேட்டதெல்லாம் செய்தீரம்மா...!
கொஞ்சமும் மனம் ஆறவில்லை - காலன் மேல் கொண்ட கோபமும் குறையவில்லை ....!
இருப்பினும் கை கூப்பி வேண்டுகின்றோம் - அம்மா
உம் ஆத்மா சாந்திபெற .... !!!


ஓம் சாந்தி ... ! சாந்தி .. ! சாந்தி ... !

இல . 115/2 ஆலடி வீதி ,
தோணிக்கல், வவுனியா.

உங்கள் பிரிவால் ஏங்கும்
குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25
.
07
.
1968



உதிர்வு
18
.
10
.
2018

## அமரர் பொன்னம்பலம் கஜேந்திரன்

(கரைதுறைப்பற்று ப.நோ.கூ.ச கிளை முகாமையாளர்)

திதி : நசமி (26.10.2020)



ஈராண்டு கடந்தாலும்
இருவிழி நீர் வற்ற வில்லை
இரு மனமும் வாழ்ந்த போது
நடந்தவை எல்லாம்
எண்ணித் துடிக்கின்றேன் ஐயா
என்னால் முடியவில்லை
என்றும் உங்கள் நினைவுகளோடு
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

பூதன் வயல் சந்தி,குமாரபுரம்,
முள்ளியவளை.

அன்பு மனைவி
க.கிருஷ்ணபவானி

ஓம் வீராட் விஸ்வப் பிரமனே நமக

# மரண அறிவித்தல்



## திருமதி
## சிவகுருநாதன் நாகலோகதேவி

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் திரு நெல்வேலியை வசிப்பிடமாகவும் பிரான்சில் வாழ்ந்தவருமான திருமதி சிவகுருநாதன் (நல்லையா) நாகலோகதேவி கடந்த (20.10.2020) செவ்வாய்க்கிழமை பிரான் ஸில் காலமானார்.

அன்னார் சோமுவீரசிங்கம் நவரத்தின மணி தம்பதிகளின் அன்பு மகளும், சதாசிவம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவகுருநாதனின் (நல்லையா) அன்பு மனைவியும்,

குமரகுருநாதன், திருச்சோதி, புண்ணியவதி, ஆனந்தகிருஷ்ணன் (பெரியப்பன்), குருமூர்த்தி, ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகந்தினி, சுந்தரலிங்கம், தவேந்திரன், டயாழினி ஆகியோரின் மாமியாரும், சாஜிப்பிரியா, மதுரா, அஜித்தா, நிருஷா, நிவேந்தன், நிறோஜன், சந்தோஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2020) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மகுடம் சூடியது யூத் அணி

கரணவாய், ஒக்.26

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய அல்வாய் விளையாட்டு விழாவில், திறந்த வயதுப்பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் அல்வாய் யூத் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீ கரித்தது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் அல்வாய் யூத் அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் யூத் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பிரகாஷ் 37 ஓட்டங்களையும், திருபரன் 8 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வதிரி டைமன்ஸ் அணி சார்பில் அமுதன் 3 இலக்குகளையும், பிரதீப், பிறேம்குமார் ஆகியோர் தலா இரு இலக்குகளையும், ராம்ஜித் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.



பதிலுக்குத்துடுப்பெடுத்தாடியவதிரிடைமன்ஸ் அணி 9.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் 19 ஓட்டங்களால் அல்வாய் யூத் அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது. வதிரி டைமன்ஸ் அணி சார்பில் அதிகபட்சமாக துவாரகன் 18 ஓட்டங்களையும், ராம்ஜித் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அல்வர்ய் யூத் அணி சார்பில் பிரசாத், நிகாஷ், கிரி ஆகியோர் தலா இரு இலக்குகளையும், சாதுஷன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இதில் ஆட்ட நாயகனாக அல்வாய் யூத் அணி வீரர் பிரகாஷ் தெரிவு செய்யப்பட்டார். (ற-422)

## 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுவாமிநாதர் சிறிபாஸ்கரன்**

பிறப்பு
07.01.1932

இறப்பு
26.10.1999

திருமதி பாலாம்பிகை
சிறிபாஸ்கரன் (மனைவி)

# சம்பியனானது சிவகுமரன்




கரணவாய், ஒக்.26

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்திய கரப்பந்தாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்றது. இதில் உடுப்பிட்டி சிவகுமரன் அணியை எதிர்த்து மாலுசந்தி மைக்கல் அணி மோதியது.

இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியபோதிலும் உடுப்பிட்டி சிவகுமரன் அணி 48:30 என்ற கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. (ற-422)

## மரண அறிவித்தல்



பிறப்பு 25.01.1951 இறப்பு 24.10.2020

**தம்பு கந்தசாமி**

எழுதுமட்டுவாழை பிறப்பிடமாகவும், நுணாவில், கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கந்தசாமி 24.10.2020 அன்று காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.10.2020) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெருங்குளம் வீதி, கல்வயல்
(குகன் மில் அருகாமை)
சாவகச்சேரி.

தகவல்: மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 2979 845

# வருடாந்த கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பம்

வவுனியா, ஒக்.26


வவுனியா திருநாவற்குளம் யங் லைன் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

வவுனியா திருநாவற்குளம் மாணிக்கதாசன் ஞாபகார்த்த விளையாட்டு மைதானத்தில் 'யங் லைன்' விளையாட்டுக் கழகத்தின் தலைவர் வினோ பிரகாஷ் தலைமையில் சுற்றுப் போட்டிகள் ஆரம்பமாகின. ஆரம்ப நிகழ்வின் பிரதம அதிதியாக வவுனியா நகரசபையின் உறுப்பினரும் ஆசிரியருமான சுந்தரலிங்கம் காண்டீபன் கலந்து கொண்டு நாணயச் சுழற்சி முறையில் ஆட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 16 அணிகள் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டன.

கிரிக்கெட் ஆரம்ப நிகழ்வில், தமிழீழ விடுதலைக் கழகத்தின் உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சந்திரேஸ்வரன் ரவி ஆகியோர் கலந்து கொண்டனர். (ற)

## மரண அறிவித்தல்



மலர்வு 15 . 02 . 1954

உதிர்வு 27 . 09 . 2020

**பேதுறுப்பிள்ளை ஞானசேகரம் (விஜயா)**

இல. 60 டேவிட் வீதி. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால் கிழக்கு மணற்பகுதியை நிரந்தர வதிவிடமாகவும் லண்டனைத் (UK) தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பேதுறுப்பிள்ளை ஞானசேகரம் (விஜயா) கடந்த 27.09.2020. அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறுப்பிள்ளை - லில்லி மாக்கிரேட் தம்பதியரின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான வைரமுத்து - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும். சர்வேஸ்வரி (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜயந்தன். ஜயந்தினி. நிஷாந்தினி ஆகியோரின் தந்தையும். ஜஸ்ரின். மோகனகுமார் ஆகியோரின் மாமனாரும். டியோன். எய்டன். ஆத்மிகா ஆகியோரின் பேரனா ரும். லங்காதேவி. லோறன்ஸ். ராஜசூரியர். அருளானந்தம். புஸ்பம். ஜோன் பிள்ளை. ஜெயசூரியர். பாப்பா, தர்மசூரியர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.10.2020) செவ் வாய்க்கிழமை லண்டனில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.


தொடர்ச்சி....

பொதுப்போக்குவரத்து...

மற்றும் களனி பாதை ஆகியவற்றில் இடம்பெறும் அனைத்து தொடருந்து சேவைகளும் இன்று முதல் ரத்து செய்யப்பட்டுள்ளன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. அத்துடன், கொள்ளுப்பிட்டி ரயில் நிலையம் வரையான கடலோர ரயில் பாதையில் 6 தொடருந்து சேவைகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, புறக்கோட்டை பிரதான பஸ் நிலையத்திலிருந்து வேறு மாகாணங்களுக்கு புறப்படும் தூர பிரதேச போக்குவரத்து சேவைகள் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து எந்த ரயிலும் சேவையில் ஈடுபடாது யாழ்ப்பாணத்திற்கு எந்த ரயிலும் வாராது. இந்தத் தீர்மானம் தொடர்பில் நாளை மீள்பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்ஸிலி ரணவக்க தெரிவித்தார்.

கொவிட் 19 வைரஸ் தாக்கத்தின். காரணமாக கொழும்பு மாவட்டத்தின் பிரதான நகரங்களுக்கு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதை தொடர்ந்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானம் தொடர்பில் இன்று மற்றுமொரு பேச்சு இடம்பெறவுள்ளது. கல்வி பொதுதராதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும், பரீட்சை சேவையில் ஈடுப்படுபவர்களுக்கும் பொது போக்குவரத்து சேவையில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவைகள் மாற்றமின்றிய விதத்தில் இடம்பெறும். தனியார் பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படுவது குறித்து உறுதியான தீர்மானங்க ளை குறிப்பிட முடியாது, என்றார். (ஒ-இ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலல் அழைப்பும்



தோற்றம் 20.06.1960

மறைவு 26.09.2020

கடந்த 26.09.2020 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
**இராமலிங்கம் கனகலிங்கம்**

அவர்களின் மரணச் செய்தியறிந்து ஒத்தாசை புரிந்து நேரிலும், தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையம், கண்ணீர் அஞ்சலி போன்றவற்றை பிரசுரித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.10.2020) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமர நகர்,
கைதடி மத்தி, கைதடி.

குடும்பத்தினர்.

## தொற்றாளர்கள்...

இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை நாடு அபாயக்கட்டத்துக்குள் சென்றுவிட்டது என அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது. ஆனால் நாடு முடக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையே என்று அவரிடம் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவராகவே நான் இருக்கின்றேன். கொரோனாவை எப்படிக் கட்டுப்படுத்தலாமோ அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். நாட்டை முடக்குவது தொடர்பில் உங்கள் பத்திரிகைக்கு ஏற்கனவே ஒரு விடயத்தைக் கூறியிருந்தேன். அதாவது நாட்டில் எந்தப் பகுதிகளில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றார்களோ அந்தப் பகுதிகளை மாத்திரம் முடக்குவோம். இதுவரை 60 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சில இடங்களை தனிமைப்படுத்தியுள்ளோம்.

நாட்டை முடக்குவதா இல்லையா என்பது தொடர்பில் அரசுதான் முடிவெடுக்க வேண்டும். கொரோனாத் தாக்கம் தொடர்பில் தினமும் அறிக்கைகளை வெளியிடுகின்றோம். அரசிடமும் சமர்ப்பிக்கின்றோம். அரசுதான் இது தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கவேண்டும்.

நாட்டை முழுமையாக முடக்கும்போது அதனால் எழும் பொருளாதார மற்றும் வாழ்வாதார அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வையும் நாம் வைத்திருக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசு ஓரிரு நாள்களுக்குள் தீர்க்கமான முடிவு எடுக்கும் என்று நான் நம்புகின்றேன்.

நாடு முழுவதும் உயர்தரப் பரீட்சை நடக்கின்றது. மாணவர்கள் மத்தியில் பயப்பீதியை ஏற்படுத்தக் கூடாது. கொரோனா தடுப்புக்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும். இது எமக்கு திரிசங்கு நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. எனினும் அரசின் உயர் மட்டத்துடன் கலந்தாலோசித்து தீர்க்கமான முடிவு எடுப்போம்.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் உயிரிழப்புக்கள் அதிகரிக்கும் என்ற சுகாதாரத் துறையினரின் அறிவிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றோம். கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு 23 மருத்துவமனைகள்தான் கைவசம் உள்ளன. நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால் சிகிச்சையளிப்பதில் பிரச்சினை பின்னடைவு ஏற்படும். அப்போது உயிரிழப்புக்களைத் தடுக்க முடியாமல் போய்விடும். அதனைத் தடுப்பதற்கான முன்னாயத்தப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றோம். கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான மருத்துவமனைகளில் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றோம்.

கொரோனா சகல மாவட்டங்களிலும் அச்சுறுத்தலாக உள்ளது. மக்கள் பயப்பீதியில் மூழ்கியிருக்கவேண்டியதில்லை. ஆனால் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றவேண்டும். கொரோனாவைத் தடுப்பது ஒவ்வொரு குடிமகனின் கையில் உள்ளது, என்றார். (ஒ,5,22)

## நெடுங்கேணியில்...

ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். நாவலப்பிட்டியவைச் சேர்ந்த ஒருவரே கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ,5)

## கைக்குண்டு...

யில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுக்காலை இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது.

இரணைஇலுப்பைக்குளத்தில் வசிக்கும் பாட்டி தனது இரு பேரப்பிள்ளைகளுடன் வீட்டுக்கு அண்மித்த சிறிய காட்டுப் பகுதியில் விறகு சேகரித்துக் கொண்டு நின்றுள்ளார். பாட்டியுடன் சென்ற இரு சிறுவர்களும் மரம் ஒன்றின் அருகில் நின்று விளையாடியுள்ளனர். மரத்தின் அடியில் புதைந்திருந்த கைக்குண்டை சிறுவர்கள் எடுத்தபோதே அது வெடித்துச் சிதறியது, என்று கூறப்படுகின்றது.

11 மற்றும் 13 வயதுடைய சகோதரர்களே காயமடைந்துள்ளனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஒ,ம,18,ரி3)

## உடல் கருகி...

முள்ளியவளை 2ஆம் வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான மகேந்திரன் கவிஞன் (வயது -22) என்பவரே உயிரிழந்தவராவார்.

முள்ளியவளை ஒட்டுசுட்டான் வீதி, ஆலடிச் சந்திப் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று தீப்பற்றி எரிவதை அவதானித்த அயலவர்கள் மற்றும் வீதியில் சென்றவர்கள் ஓடிச் சென்று தீயை அணைத்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

இருந்தபோதிலும் மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர் உடல்கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. வேறு வாகனங்களுடன் மோதி ஏற்பட்ட விபத்தா? அல்லது திட்டமிட்ட நடவடிக்கையா? என்பது தெரியவரவில்லை. அதேவேளை ஆலமரத்துடன் மோதியே விபத்து இடம்பெற்றிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனிடையே விபத்தில் சிக்கிய இளைஞர் முள்ளியவளை கமநலசேவைத் திணைக்களத்துக்கு அருகாமையில் வசிப்பவர் என்றும், அவர் மோட்டார் சைக்கிள் திருத்தகம் ஒன்றில் பணியாற்றிவருபவர் என்றும் தெரியவருகிறது.

மேலும் இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஒ,246)

## கொரோனாவால்..

தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று அரசு அறிவித்துள்ளது. (ஒ,இ)

## முடக்கப்பட்ட...

மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர் தனிமைப்படுத்தப்படுவது தொடர்பில் மக்களிடையே குழப்பநிலை காணப்படுவது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் பொலிஸ் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சில இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸ் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலிருந்து வடக்கு மாகாணத்துக்கு யாராவது வந்தால் அவர்கள் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறான பிரதேசங்களிலிருந்து வருபவர்கள் அது தொடர்பில் தமது பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5)

## கொள்ளளவை...

நெருங்கியுள்ளது. 50 நோயாளர்கள் ஒரு தடவையில் சிகிச்சையைப் பெறமுடியும். தற்போது அங்கு 43 நோயாளர்கள் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கொரோனா நோயாளிகள் தங்கவைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் ஒரே ஒரு மருத்துவமனையாக மருதங்கேணி மருத்துவமனை உள்ளது. அங்கும் 50 நோயாளர்களுக்கே ஒரே தடவையில் சிகிச்சையளிக்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 'மருதங்கேணி மருத்துவமனையில் இதுவரை 43 நோயாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்' என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ,5)

## பேச்சு..

பேச்சு இப்போதைக்கு நடைபெறுமா என்பது தெரியவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மோடியே கூட்டமைப்பினரை பேச்சுக்கு அணுகினார். ஆதலால் இந்தியத் தரப்பினரே சந்திப்புக்கான காலத்தை ஒழுங்குசெய்வார்கள் என்று எதிர்பார்த்துள்ளோம். இந்தப் பேச்சு இணையத் தொடர்பாடல் மூலம் நடைபெறும் என்றே நம்புகின்றோம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையில் மாகாண சபை நிர்வாக முறை உருவாகக் காரணமாக இருந்த இந்தியா, தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதேவேளை, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைச் சீண்டிப் பார்க்கும் வகையில் இலங்கை அரசுடன் சீனா நேரடியாக இரு தரப்பு உறவுகளைப் பலப்படுத்தி வருகின்றது. இந்தப் பின்னணியிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை முன்னெடுக்க இந்திய இராஜதந்திரத் தரப்பினர் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5,22)

## தப்பி வந்த...

மன்னாருக்கு வந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் தப்பி வந்த நபரை மன்னாரில் வைத்து நேற்று மடக்கிப்பிடித்து கந்தக்காடு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பேலியகொட மீன் சந்தை பகுதியில் வேலை செய்து வந்து நிலையில் இவருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரை அங்கு தனிமைப்படுத்தி வைத்துள்ளனர். அவர் அங்கிருந்து தப்பி வந்துள்ளார். தனது கைப்பேசியையும் நிறுத்தி வைத்துள்ளார்.

அவரது மாதிரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது தொற்றுக் கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பத் தேடியபோது தப்பித்துச் சென்ற விடயம் தெரியவந்துள்ளது. உடனடியாகவே தேடுதல் முன்னெடுக்கப்பட்டது. அவர் தப்பி வந்து மன்னாரில் தங்கியிருந்த விடயத்தைக் கண்டறிந்து அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ஒ,5)

## விசாரணை...

8 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து, விசாரணைகளை மேற்கொண்டுவரும் தனி நபர் ஆயத்தின் முன் இன்றும், நாளையும் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள மூன்றாம் வருட மாணவர்கள் சாட்சியமளிக்கவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

கடந்த 8 ஆம் திகதி கலைப்பீடத்தின் இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு தொடர்பான விசாரணைகள் கடந்த 21 ஆம் திகதி முதல் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினம் தாக்குதல் சம்பவத்தின்போது அவ்விடத்தில் நின்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், பாதுகாப்பு ஊழியர்களும் சாட்சியமளித்திருந்தனர். அதன் பின், சம்பவம் தொடர்பில் சம்பவத்துடன் தொடர்புபட்ட இரண்டாம் வருட மாணவர்கள் கடந்த 23 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை சாட்சியமளித்திருந்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என கலைப்பீட சபையால் இனங்காணப்பட்டு, துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மூன்றாம் வருட மாணவர்களை இன்றும், நாளையும் சாட்சியமளிக்க வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்பின் துணைவேந்தர் மற்றும் கலைப்பீடாதிபதி ஆகியோரின் வாக்கு மூலங்களை எதிர்வரும் புதன்கிழமை பதிவு செய்த பின்னர் விசாரணை அறிக்கை கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ,5)

## நேற்று...

வரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.


மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை, பேலியகொட மீன் சந்தை தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களுக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 872 ஆக உயர்வடைந்துள்ளது. அவர்களில் 4 ஆயிரத்து 54 தொற்றாளர்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 3 ஆயிரத்து 803 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 16 பேர் உயிரிழந்துள்ளனர். (ஒ,22)

## பரீட்சை...

விடுத்துள்ளார். தேவையான அனைத்து நடவடிக்கைகளும் பரீட்சை நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ,இ)

# சிறுமியை மொட்டையடித்து துன்புறுத்திய பொஸ்னிய குடும்பம் நாடு கடத்தப்பட்டது



பாரிஸ், ஒக்.26

பிரான்ஸில் செர்பிய இன கிறிஸ்தவ இளைஞர் ஒருவருடன் காதல் தொடர்பு கொண்டிருந்தமையால் சிறுமி ஒருவரைத் தாக்கித் துன்புறுத்தி தலைச் சவரம் செய்த பொஸ்னிய முஸ்லீம் குடும்பத்தினர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

17 வயதுடைய அந்த சிறுமியின் தாய், தந்தை, சகோதரி மற்றும் இரு சகோதரர்கள் ஆகிய ஐவருமே இவ்வாறு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

ஐவரும் பொஸ்னியஹெர்சகோவினா தலைநகர் சரஜீவோவுக்கு சனிக்கிழமை விமானம் மூலம் நேற்றுத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டனர் என்று பிரெஞ்சு உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.


ஏற்கனவே புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்த இக் குடும்பத்தினர் மீதான விசாரணைகள் வெள்ளியன்று பிரான்ஸின் பெசசொன் நகர நீதிமன்றம் ஒன்றில் முடிவடைந்தது. தீர்ப்பு அறிவிக்கப்பட்ட கையோடு நாடு கடத்துவதற்கு தாய், தந்தை இருவரும் அங்கு வைத்து மீண்டும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

துன்புறுத்தலுக்கு ஆளான சிறுமி சிறுவர் நலன் பேணும் காப்பகம் ஒன்றின் பராமரிப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர் தனது 18 வயதைப் பூர்த்தி செய்தபின்னர் அவருக்கு முறைப்படி பிரான்ஸின் வதிவிட அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தினருடன் சேர்ந்து சிறுமியை மொட்டை அடித்துத் துன்புறுத்திய சிறுமியின் மாமனார், மாமி ஆகியோருக்கும் நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தபோதிலும் அவர்கள் பிரான்ஸில் அரசியல் தஞ்சம் பெற்றிருந்த காரணத்தால் இருவரும் உடனடியாக நாடுகடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவர்களுக்கு வழங்கப்பட்ட அகதிகள் புகலிட உரிமை பறிக்கப்பட்டு அவர்களும் நாடு கடத்தப்படுவதற்கு வாய்ப்புள்ளது எனவும் கூறப்படுகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் பொஸ்னிய முஸ்லிம் சிறுமிக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமை தொடர்பான செய்தி நாடெங்கும் மக்களது கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# வாக்களித்தார் ட்ரம்ப்!

வொஷிங்டன். ஒக்.26

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான தனது வாக்கினை புளோரிடாவில் பதிவுசெய்தார் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப். அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் போட்டியிடவுள்ளார் என்பதுடன், அவரை எதிர்த்து ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் களமிறங்கியுள்ளார்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பல மாநிலங்களில் தபால் மூல வாக்கெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இந் நிலையில் புளோரிடாவிலுள்ள நூலகத்தில் அமைக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்தில் ட்ரம்ப் தமது வாக்கைப் பதிவு செய்தார். முகக்கவசம் அணிவதை விரும்பாத ட்ரம்ப் முகக்கவசம் அணிந்திருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது.

(வ-இ)



# ஆழ்துளை கிணற்றில் சுஜித் சிக்கி ஓராண்டு நிறைவு

*'வலியை விவரிக்க முடியாத' பெற்றோர்*

பயன்படுத்தாத ஆழ்துளைக் கிணற்றில் சிக்கி உயிரிழந்த இரண்டு வயது சிறுவன் சுஜித் வில்சனின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி வரும் 29ஆம் திகதி அனுஸ்டிக்கப்படுகிறது.

சென்ற ஆண்டு ஒக்ரோபர் 25ஆம் திகதி ஆழ்துளைக் கிணற்றுக்குள் சுஜித் விழுந்து, இப்போது ஓராண்டாகிறது. சிறுவன் சுஜித் கிணற்றில் சிக்கிக்கொண்ட விபத்தையும், அவரை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்ததையும் ஆறாத வடுவாக சுமந்து வருகின்றனர் நடுக்காட்டுப்பட்டி கிராம மக்கள்.



# பாடசாலையில் சூடு: 8 மாணவர்கள் சாவு

மத்திய ஆப்பிரிக்க நாடான மத்திய கமெரூனில் பாடசாலையொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குறைந்தது எட்டு மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். இதனை ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கமெரூனின், கும்பா நகரில் அமைந்துள்ள பாடசாலையொன்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட இந்த தாக்குதலில் 12 பேர் காயமடைந்துள்ளனர் என மனித நேய விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புக்கான ஐ.நா. அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பினரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (வ-இ)

# 'சம்பளம் போதவில்லை' பதவி விலகுகிறார் போரிஸ்



இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்ஸன் தனக்கு கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு குடும்பம் நடத்த முடியாத காரணத்தால் பதவி விலகும் முடிவில் உள்ளார் என அந்நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்ஸன் தற்போது மாத ஊதியமாக ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்து 402 பவுண்டுகள் பெற்று வருகிறார்.

இது இந்திய ரூபா மதிப்பின்படி ஒரு கோடியே 43 லட்சத்து 29 ஆயிரம் ரூபாவாகும்.

இந்நிலையில் இந்தச் சம்பளத்தைக் கொண்டு குடும்பம் நடத்த முடியாத காரணத்தால் பிரதமர் பதவியை ராஜினாமா செய்யும் திட்டத்தில் இருக்கிறார் போரிஸ் ஜான்ஸன். இந்தத் தகவலை இங்கிலாந்தின் முன்னணி நாளிதழான தி டெய்லி மிரர் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

# சாம்சங் தலைவர் 78 வயதில் மறைவு

சியோல், ஒக்.26

பிரபல மின்னணு சாதனங்கள் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான சாம்சங் நிறுவனத்தின் தலைவர் லீ குன் ஹீ நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 78. கடந்த 2014ஆம் ஆண்டு மாரடைப்பு ஏற்பட்டு உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட லீ குன் ஹீ தொடர்ந்து சிகிச்சை எடுத்து வந்த நிலையில் நேற்று காலமானார் என்று சாம்சங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சாதாரண தொலைக்காட்சி நிறுவனமாக இருந்த சாம்சங் நிறுவனத்தை லீ குன் ஹீ தனது தந்தையிடமிருந்து பெற்ற முதலீட்டின் மூலம் உலகின் பெரிய நிறுவனமாக மாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# பொறிபறக்கவிட்டது சென்னை சுப்பர் கிங்ஸ்





ஐ.பி.எல். தொடரின் பிளே ஒப் சுற்றுக்கான வாய்ப்பை தவறவிட்டுள்ள போதும், பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு எதிராக பொறிபறக்கும் ஆட்டத்தை ஆடியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. ஹோலி தலைமையிலான பெங்களூர் அணியை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மீண்டு வந்தது சென்னை அணி.

டுபாயில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. படிக்கல் (22), பிஞ்ச் (15) ஓட்டங்களுடன் வெளியேறினர். ஹோலி மற்றும் டி வில்லியர்ஸ் இணைந்து சிறந்த இணைப் பாட்டத்தை வழங்கினர். ஆனால் சென்னை அணியின் சிறப்பான பந்துவீச்சுக்கு முன்பாக பெங்களூர் அணியால் அதிரடி ஆட்டத்தை ஆட முடியவில்லை. 82 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிரப்பட்ட நிலையில் டி வில்லியர்ஸ் 36 பந்துகளில் 39 ஓட்டங்களுடன் வெளியேற தொடர்ந்து நுழைந்த மொயின் அலி ஓர் ஓட்டத்துடனும், ஹோலி 50 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 'டெத் ஓவர்களில்' மிகச் சிறப்பாக பந்து வீசியதால், 6 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களை மாத்திரமே பெங்களூர் அணியால் பெற முடிந்தது. பந்து வீச்சில் சாம் கரன் 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு களமிறங்கிய சென்னை அணி அதிரடியில் வெளுத்து வாங்கியது. ஹைக்வாட், பிளெஸிஸ் இணை வலுவான ஆரம்பத்தை அமைத்தது. 13 பந்துகளில் 25 ஓட்டங்களுடன் பிளெஸில் வெளியேறினார். ராயுடு, ஹைக்வாட்டுடன் இணைந்து அதிரடியை கைவிடாது தொடர்ந்தார். 39 ஓட்டங்களுடன் ராயுடு வெளியேறினார். மறுமுனையில் கலக்கிய ஹைக்வாட் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களைப் பெற்றார். 18.4 பந்துப் பரிமாற்றங்களில் சென்னை 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஆட்ட நாயகனாக ஹைக்வாட் தெரிவானார். (ஒ-5)



# ராஜஸ்தான் காட்டடி



மும்பை இந்தியன்ஸ் அணிக்கே அதிரடியில் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து அபார வெற்றியைப் பதிவு செய்தது ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி. ஐ.பி.எல். தொடரின் பிளே ஒப் வாய்ப்பை நேற்றைய வெற்றியின் ஊடாக இன்னமும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றது அந்த அணி.

195 ஓட்டங்கள் என்ற மும்பையின் இலக்கை 10 பந்துகள் மீதம் இருக்கையில் 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டு 'சிறப்பான சம்பவத்தை' பதிவு செய்தது ராஜஸ்தான் அணி.

அபுதாபியில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. கடந்த சில ஆட்டங்களில் சிறப்பாக ஆடிய குயிட்டன் டி கொக் 6 ஓட்டங்களுடன் ஆச்சரின் பந்து வீச்சில் முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே ஆட்டமிழந்தார். சென்னைக்கு எதிராக வெளுத்துக்கட்டிய இசான் கிசான் நேற்று 36 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்றார். சூரியகுமார் யாதவ் 26 பந்துகளில் 40 ஓட்டங்களையும் திவாரி 25 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்று அணியைத் தூக்கி நிறுத்தினர். இறுதிக் கட்டத்தில் ஹார்த்திக் பாண்டியா வெளுத்து வாங்கினார். 21 பந்துகளில் 7 சிக்ஸர்கள் அடங்கலாக 60 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் விளாசினார். 5 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களை மும்பை அணி பெற்றது.



பதிலளித்து ஆடிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்பம் சுமாராக அமைந்தது. ரொபின் உத்தப்பா 13 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் ஸ்ரீவன் ஸ்மித் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய பென் ஸ்ரோக்ஸ், சஞ்சு சாம்ஸன் இணைந்து மும்பையின் பந்து வீச்சை ஒரு கை பார்த்தனர். இருவரும் மாறி மாறி வெளுத்துக்கட்ட அணியின் ஓட்ட எண்ணிக்கை ரொக்கெட் வேகத்தில் உயர்ந்தது. சாம்ஸன் 27 பந்துகளில் அரைச்சதம் கடக்க மறுமுனையில் ஸ்ரோக்ஸ் 59 பந்துகளில் 100 ஓட்டங்கள் விளாசினார். இறுதியில் 18.2 பந்துப் பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை ாத்திரம் இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது ராஜஸ்தான் அணி. ஆட்டநாயகனாக பன்ஸ்ரோக்ஸ் தெரிவானார். (ஒ-5)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
A/L
V2 Travels
0768226241

பெண் பணியாளர் தேவை
வயோதிப தாயார் ஒருவரைப் பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை. தங்கி நிற்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 314 6013

MATHS GROUP CLASSES
(English and Tamil- Medium)
Mr. S.Tharshan
077 454 0529

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் ராச வீதியில் மெயின் றோட்டுடன் 6 பரப்பு சீர்செய்யப்பட்ட காணி விற்பனைக்கு உண்டு: தரகர் தேவையில்லை.
பிரித்து கொடுக்கப்படும் 1 ½ பரப்பாக.
தொடர்பு : குரு
077 805 1655
077 468 3354, 076 640 0974

Car விற்பனைக்கு
பெண் வைத்தியரின் தனிப்பாவனையிலுள்ள 2015 ஆண்டு Celerio Vxi (41000 km) Car விற்பனைக்குண்டு.
பார்வையிட 4 pm-6 pm
தரகர் தேவையில்லை.
தொடர்பு:076 843 0645

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டிபுரம் அபிராமி அம்மன் கோயிலுக்கு முன் வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் ரூபா (300.000 ரூபா) தரகர் தேவை யில்லை தொடர்பு- குரு
076 888 4625
0769986806, 0740754204

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.